# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 7
செய்தி 3
ஆகஸ்ட் 2021
விலை ரூ 10/-




மத்திய அரசு
அமல்படுத்த இருக்கும்
மின்சார சட்டம் 2021 —ஐ
திரும்ப பெற வலியுறுத்தி
தமிழ்நாடு மின்வாரிய
தொழிற் சங்க கூட்டுக்குழு
சார்பாக மாநிலம் முழுவதும்
கண்டன ஆர்பாட்டம்
19.07.2021

















மத்திய அரசு அமல்படுத்த இருக்கும் மின்சார சட்டம் 2021 –ஐ
திரும்ப பெற வலியுறுத்தி தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்க கூட்டுக்குழு
சார்பாக மாதிலம் முழுவதும் கண்டன ஆர்பாட்டம்
19.07.2021
கோபி
நாகை
தர்மபுரி
வடசென்னை
அனல் மின்நிலையம்
பெரம்பலூர்
வடசென்னை
அனல் மின்நிலையம் – 2
இராமநாதபுரம்

# மின்கதிர்
செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**
**ஆகஸ்ட் 2021**


**உள்ளே....**


- ★ மின்ஊழியர்களின் நாடு தழுவிய போராட்டம்...
- ★ பயத்தின் பிடியில் ஒன்றிய அரசு
- ★ ஆகஸ்ட் 9 தேசத்தை பாதுகாப்போம்.
- ★ ஆகஸ்ட் 10 வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு
- ★ மத்திய அமைப்பின் மாநில செயற்குழு முடிவுகள்
- ★ மின்துறை அமைச்சரின் அறிவிப்பும் சீரமைப்பும்
- ★ புலிவந்தாச்சு....
- ★ பெருந்தொற்று காலம்...
- ★ தமிழக அரசின் வெள்ளை அறிக்கையும் மின்துறையும்
- ★ மின்வாரியத்தில் ஊர்மாறுதலில் வாரிய விதிமுறைகள் மீறல்



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# மின்ஊழியர்களின் நாடு தழுவிய போராட்டத்தால் ஒன்றிய அரசு மின்மசோதாவை தாக்கல் செய்ய இயலவில்லை.

ஒன்றிய பிஜேபி அரசு தேசத்தின் பொதுத்துறை நிறுவனங்களை காவு கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் பாதுகாப்புத்துறை, இன்சூரன்ஸ் உள்ளிட்ட துறைகளில் அந்நிய முதலீட்டை அனுமதிக்க குரல் வாக்கெடுப்பில் மசோதாவை நிறைவேற்றி விட்டார்கள்.

பெகாசஸ் பிரச்சனை காரணமாக அதாவது தலைவர்களின் முக்கிய தொலைப்பேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்பதற்கு பயன்படுத்திய பிரச்சனை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சிகள் போராடி வரும் நிலையில் அதற்கு மதிப்பு கொடுக்காமல் பாராளுமன்றத்தில் அமளி ஏற்பட்ட பொழுது, அமளிக்கு நடுவே குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றி யிருப்பது ஜனநாயகத்தின் குரல் வலையை நசுக்கி உள்ளது பிஜேபி அரசாங்கம்.

இதே போல மின்சார சட்டத்திருத்த மசோதா 2021-ஐ நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய முயற்சித்து வந்தது. இந்திய நாடு முழுவதும் மின் ஊழியர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள், இணைந்து நடத்திய ஜூலை 19 ஆர்ப்பாட்ட இயக்கம், ஜூலை 29-ல் கருத்தரங்குகள், மக்கள் சந்திப்பு இயக்கங்கள் இறுதியாக ஆகஸ்ட் 10-ல் அறிவித்த நாடுதழுவிய வேலை நிறுத்தம் மற்றும் விவசாயிகளின் ஆதரவு போராட்டம் ஆகியவை தான் மின்சார மசோதாவை இந்த மழைக்கால கூட்டத் தொடரில் கொண்டு வருவதற்கு ஒன்றிய பிஜேபி அரசு அஞ்சியது.

தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு ஆகஸ்ட் 10 வேலை நிறுத்தத்தை ஒத்தி வைக்க முடிவு எடுத்தாலும் நாடாளுமன்றத்தில் எந்த தேதியில் தாக்கல் செய்யப்படுகிறதோ அந்த நாளில் வேலை நிறுத்தம் செய்வோம் என மோடி அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்திய நாடு முழுவதும் ஆகஸ்ட் 10-ல் கண்டன முழுக்கங்களும், மின்துறையை பாதுகாப்போம் என்றும், டெல்லி காவல்துறை நாடாளுமன்ற வீதியில் ஜனநாயக ரீதியில் போராடுவதற்கு அனுமதி மறுத்ததை கண்டித்து, ஜனநாயகத்தை பாதுகாப்போம் என்ற கோஷத்தை முன்வைத்து

கண்டன முழுக்கங்களை எழுப்புவது என்ற நடவடிக்கை நாடு முழுவதும் உற்சாகமாக நடைபெற்றது.

இதே நேரத்தில் கேரள இடது முன்னணி அரசு மின்சார சட்டதிருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடாது என கேரள சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்த பின்னணியில் ஆகஸ்ட் 9-ல் வெள்ளையனே வெளியேறு என்று 1942-ல் இந்திய மக்கள் உயர்த்தி பிடித்த கோஷத்தை, இன்றைக்கு இந்தியாவை துண்டாட நினைக்கும் கொள்ளையனே வெளியேறு என்ற கோஷத்தை முன்வைக்கும் நிலைக்கு மோடி அரசாங்கம் உழைக்கும் வர்க்கத்தை தள்ளியுள்ளது. மோடி அரசின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை கண்டித்து அனைத்து மத்தியதர தொழிற்சங்கங்கள் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டங்கள் ஆகஸ்ட் 9-ல் நடைபெற்றது. இவைகள் எல்லாம் மோடி அரசுக்கு உழைப்பாளிகளின் எச்சரிக்கை மணி.

மாநில திமுக அரசு வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் மின் வாரியம் போக்குவரத்து உள்ளிட்டவைகள் கடன் சுமையில் சிக்கி உள்ளது. என கூறி இருக்கிறார்கள். இந்த கடன் சுமையை பொது மக்கள் தலையிலேயோ, மின்வாரிய பணியாளர்கள் மீதோ சுமத்தக் கூடாது. ஆளும் அரசுகளின் தவறான மின் கொள்முதல், தளவாட பொருட்களின் முறைகேடுகள், இவைகள் எல்லாம் தானே காரணம் என்பதை தற்போதைய அரசு உணரும் என நம்புகிறோம்.

திமுகவிற்கு வாக்களிக்க தவறியவர்கள் இந்த நல்ல ஆட்சியைக் கண்டு ஏன் வாக்களிக்க தவறினோம் என நினைக்கின்ற வகையில் ஆட்சி நடத்துவோம் என்று தற்போதைய தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பரப்புரையில் கூறியதை நினைவுப்படுத்த விரும்புகிறோம்.

---







மின்சார சட்டத்திருத்த மசோதா 2021-ஐ கைவிடக் கோரி டெல்லியில் நடைபெற்ற தொடர் போராட்டத்தில் ஆகஸ்ட் 6-ம் தேதி அன்று தமிழகத்தில் உள்ள மத்திய அமைப்பு, சம்மேளனம், எம்பிளாயீஸ் பெடரேசன், என்.எல்.ஓ, பொறியாளர் சங்கம், பொறியாளர் கழகம், மின்துறை பொறியாளர் அமைப்பு உள்ளிட்ட சங்கங் களிலிருந்து 30-க்கும் மேற்பட் டோர் பங்கேற்றனர்.

மத்திய அமைப்பின் சார்பில் தோழர்கள் எஸ்.இராஜேந் திரன், ஆர்.ரவிக்குமார், மற்றும் எம். முருகானந்தம் ஆகிய தோழர்களும்,

பொறியாளர் அமைப்பின் சார்பாக தோழர்கள் ஆர். ஆடலரசு மற்றும் ஆதன் இளங்கீரன் ஆகிய தோழர்களும் பங்கேற்றனர்.




மத்திய அரசு மின்சார சட்ட திருத்த மசோதா 2021 ஐ நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த சட்டதிருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் மின் நுகர்வோர்களுக்கு ஏற்படும் சிரமங்களை மக்களிடத்தில் தெரிவிப்பதோடு இந்த வேலை நிறுத்தத்திற்கு மக்களின் மேலான ஆதரவை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த கொடிய கொரானா தொற்று நோய் காலத்தில் ஒன்றிய அரசு அத்தனை பொதுத்துறைகளையும் விற்பதற்கான நடவடிக்கையும் எடுத்து வருகின்றது. பி.எஸ்.என்.எல். இன்சூரன்ஸ். பாதுகாப்புத்துறை, மின்சாரம், நிலக்கரி, உள்ளிட்ட துறைகளில் அந்நிய மூலதனத்தை அனுமதித்து தனியார் மயப்படுத்த திட்டமிட்டு வருகிறது. தேசத்தின் இயற்கை வளங்களை தனியார் முதலாளிகள் கொள்ளை அடிப்பதற்கு வசதிகள் செய்து கொடுத்து வருகிறது.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய காரணத்தால் விவசாயத்தில் உணவு உற்பத்தியில் பசுமை புரட்சி ஏற்பட்டது. சிறு தொழில்கள் கைத்தறி,விசைத்தறி உள்ளிட்ட தொழில்களுக்கு மானிய விலையில் மின்சாரம் வழங்கிய காரணத்தால் தொழில் வளர்ச்சியடைந்தது. மின்சாரத்தை காணாத சிறு குடிசையில் வாழும் மக்களுக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் மின்சாரத்தை பயன்படுத்தும் வாய்ப்பு கிட்டியது.

சுதந்திரத்திற்கு பின்பு மாநில அரசின் கட்டுப்பாட்டில் மாநில மின்வாரியங்கள் சிறப்பாக செயல்பட்டு வந்ததை கணக்கில் கொள்ளாமல் மத்திய அரசு மின்சார சட்டதிருத்த மசோதா 2021-ஐ அமுலாக்க நிறைவேற்ற துடிக்கிறது.

தமிழகத்தில் கஜா, வர்தா, தானே, ஒக்கி சென்னை வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் மின்வாரியம் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த காரணத்தால் தான் விரைவாக பேரிடரில் ஏற்பட்ட மின்தடை பணிகளை செய்ய முடிந்தது. மும்பை, ஒரிசா போன்ற இடங்களில் தனியாருக்கு மின்விநியோகத்தை கொடுத்த போது இயற்கை பேரிடர் காலங்களில் அவர்கள் அந்த பணியை செய்ய முடியாமல் விட்டுச் சென்று பின்னர் மாநில மின்வாரிய ஊழியர்கள் பணிகளை செய்தனர் என்பதை உணர்ந்தும் மின்துறையை தனியார் மயமாக்க துடிப்பது கார்ப்ரேட் முதலாளிகளுக்கு மின்வாரியத்தை தாரை வார்ப்பது என தெளிவாக தெரிகிறது

**மின் நுகர்வோருக்கு ஏற்படும் பாதிப்புகள்**

★ மின்சாரம் விநியோகம், உற்பத்தி ஆகியவை மாநில அரசின் கட்டுப்பாட்டிலிருந்து தனியார் கார்ப்பரேட் முதலாளிகளின் கைகளுக்கு சென்றுவிடும்.

★ மின்சாரம் எட்டாக்கனியாக மாறி சந்தைப் பொருளாக மாறிவிடும்.

★ இடை மானியம் படிப்படியாக குறைப்பதால் மின் கட்டண உயர்வை பொது மக்கள் சந்திக்க நேரிடுவதுடன் குடிசைகள், வீடுகள், விவசாயகளின் இலவச மின்சாரமும், கைத்தறி, விசைத்தறிக்கு வழங்கி வரும் மானிய விலை மின்சாரம் பறிக்கப்படும்.

★ மின் கட்டணம் நிர்ணயம் செய்யும் மாநில அரசின் உரிமைகள் பறிக்கப்பட்டு தனியார் கார்ப்பரேட் முதலாளிகளிடம் சென்று விடும்.

- ★ தனியார் முதலாளிகள் அதிக மின்சாரத்தை பயன்படுத்தும் மின் நுகர்வோரை மட்டுமே தேர்வு செய்வார்கள்.
- ★ அரசின் பொதுத் துறையில் வேலை வாய்ப்புகள் பறிபோகும்.

**மின் ஊழியர்களுக்கு ஏற்படும் பாதிப்பு**

- ★ மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் தனியாரிடத்தில் செல்வதால் மின்வாரிய ஊழியர்கள் தனியார்துறை ஊழியர்களாக மாறிவிடுவார்கள்.
- ★ மின் ஊழியர்கள், ஏற்கனவே பெற்று வரும் பதவி உயர்வு உள்ளிட்ட சலுகைகள் மற்றும் ஓய்வூதியம் பறிபோகும் நிலை உருவாகும்.
- ★ மின்சார வாரிய நிர்வாகம் நகர்புறங்களில் இருந்து விலகி கிராமபுறத்தை நோக்கிச் செல்ல நேரிடும்.

எனவே மின் துறையை பாதுகாக்க பொதுத்துறையாக பாதுகாக்கின்ற இந்த போராட்டத்தில் நாம் அனைவரும் பங்கு பெற வேண்டும். அனைத்து துறைகளிலும் தொழிலாளர்கள், ஊழியர்கள், போராடி வருகின்றனர். வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராடி வரும் விவசாயிகள், மின்சார சட்டத்திருத்த மசோதாவை கைவிடக் கோரியும் போராடி வருகிறார்கள்.

மின்துறையை பாதுகாக்க தரமான மின்சாரம், தடையில்லா மின்சாரம். மக்கள் வாங்கும் விலையில் மின்சாரம் என்ற கோஷத்தை முன்வைத்து இந்திய நாடு முழுவதும் மாநில மின் வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள், ஒன்றிய அரசின் மின்சார சட்டத்திருத்த மசோதாவை கைவிட ஆகஸ்ட் 10-ல் வேலை நிறுத்தம் செய்ய இருந்தனர்.

**ஆனால்ஒன்றிய அரசு இந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரில் போராட்டத்தின் விளைவாக கொண்டு வரவில்லை.**



மின்துறையை

பொதுத்துறையாக

பாதுகாக்கும்

கேரள இடது முன்னணி அரசு!

கம்யூனிஸ்ட்டுகளைப் போல பொதுத்துறைகளை பாதுகாப்பதற்கு யாராலும் யோசிக்கவோ போராடவோ முடியாது. கேரள முதல்வர் பினராயி விஜயன் ஏற்கனவே திருவனந்தபுரம் விமான நிலையத்தை அதானி நிறுவனத்திடம் பராமரிப்பதற்கு ஒன்றிய பிஜேபி அரசு கொடுத்த பொழுது அதற்கு எதிராக போராடி மாநில அரசே பராமரிப்பு செய்ய முடியும் என போராடியவர். ஆனாலும் ஒன்றிய பிஜேபி அரசு அதானி வகையறாக் களின் குடும்ப நலனையே பெரியதாக நினைத்தது.

வரலாற்று சாதனைகள் படைத்துவிடும் கேரள அரசு மின்சார சட்டத்திருத்த மசோதா 2021-ஐ நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யக்கூடாது என கேரள சட்டமன்றத்தில் ஒரு மனதாக தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். லட்சக்கணக்கான மின் ஊழியர்கள் மின்துறையை பாதுகாக்க போராடி வரும் நிலையில், கேரள சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானம் மின்வாரிய பணியாளர்களுக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பாக .....

வாழ்த்துக்கள்! கேரள இடது முன்னணி அரசுக்கு

லால்சலாம் தோழர் பினராயி விஜயன் அவர்களுக்கு,



# பயத்தின் பிடியில் ஒன்றிய அரசு

சமீபத்தில் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு எடுக்கக்கூடிய பல்வேறு நடவடிக்கைகள் அவர்களின் பயத்தைக் காட்டுவதாகவே அமைகின்றது. குறிப்பாக திரைப்படமாக்கல் சட்ட திருத்தமானது பயத்தின் உச்சியில் இருப்பதாக நமக்கு காட்டுகிறது. சினிமா கலையின் மூலம் ஆட்சி அதிகாரத்தை பிடித்தவர்கள் இரண்டு பெரும் ஆளுமைகள். முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன், முன்னாள் ஆந்திர முதலமைச்சர் திரு.என்.டி.ராமாராவ் அவர்களை தொடர்ந்து சில திரைப்பட நடிகர்கள் அரசியலுக்கு வருவதும் அதன் தொடர்ச்சியே...

திரைப்படத்திற்கு பிறகு நவீன விஞ்ஞானம், சோசியல் மீடியா என்ற தளத்தில் முகநூல், டுவீட்டர், இன்ஸ்டாகிராம், யுடியூப், வாட்ஸ்அப், டெலிகிராம் போன்ற எண்ணற்ற சமூக வலைதளங்களில் மக்கள் உரையாடத் தொடங்கி விட்டனர். ஒரு ஆளுமையை பல லட்சக் கணக்கானவர்கள் பின் தொடர்ந்து அவரின் பதிவுக்கு நேர்வினையாற்றவும், எதிர் வினையாற்றவும் செய்கின்றனர். இந்த சமூக வலைதள நிகழ்வுகள் ஒரு சில விநாடிகள் பல லட்சக்கணக்கானவர்களை சென்றடைந்து விடுகிறது. இதற்காக நாம் செலவழிக்கும் காலமும் நேரமும் மிகவும் குறைவு. ஒருவர் தனது கருத்தை பலரிடம் கொண்டு சேர்க்கும் செயலை தொடர்ந்து செய்து வருகின்ற பொழுது அங்கு ஒரு கருத்தியல் மாற்றம் தானாக நிகழ்கிறது. இந்த கருத்தியல் மாற்றத்தைத்தான் கடந்து ஓராண்டு காலமாக மோடி என்ற மிகப்பெரிய பிம்பத்தை, மாய பிம்பத்தை கொஞ்சம் கொஞ்சமாக சமூக வலைதளக் குழுக்கள் சிதைத்து வருகிறது. இதனால் தான் சமூக வலைதளங்களுக்கும் கட்டுப்பாடுகள் கொண்டு வந்து தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர மோடியின் ஒன்றிய அரசு நினைக்கிறது அது எப்போதும் நடக்கப் போவதில்லை.

சினிமா கலைத்துறையும், சமூக ஊடகங்களும் இரட்டைக்குழல் துப்பாக்கிகளைப் போல எனவே தான் மோடியின் ஒன்றிய அரசு அஞ்சுகிறது. 2014-ல் பாஜக ஆட்சிக்கு வருவதற்கு அவர்கள் சமூக வலைதளங்களை எப்படி பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தார்களோ, அந்த வழிமுறையை தற்பொழுது அனைத்து மாநில கட்சிகளும் கையாள துவங்கி விட்டன. பாஜக ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக ஒவ்வொரு வங்கி கணக்கிலும் ரூ.15 லட்சம் போடுவேன் என்றதும், தேசிய நதிகளை இணைப்பேன் என்றதும், சுவிஸ் வங்கி உள்ளிட்ட வெளிநாட்டு வங்கிகளில் உள்ள கருப்பு பணத்தை இந்தியாவிற்கு கொண்டு வருவேன் என்றதும், இந்திய மக்கள் பிஜேபிக்கு வாக்களித்து வெற்றிபெறுவதற்கு காரணமாகும். ஏழு ஆண்டுகள் கடந்த பின்பும் இன்று வரை அதற்கான எந்த நடவடிக்கையும் இல்லை. இது போன்ற மோடியின் ஒன்றிய அரசு தேர்தல் காலத்தில் அளித்த பொய் மூட்டைகள் எல்லாம் இன்று ஒன்றியஅரசுக்கு எதிராக வந்து விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக சட்டங்களை கொண்டு வந்து தடுத்து விட முடியும் என்று ஒன்றிய அரசு நினைக்கிறது. அது எந்த காலத்திலும் நடக்க இயலாது.

திரைப்படத் துறையில், திரைப்படங் களுக்கு தணிக்கைத்துறை சான்றிதழ் அளித்து திரைப்படங்கள் திரையிடப்படுகிறது. தணிக்கை வாரியம் ஒரு முறை சான்றிதழ் அளித்து விட்டால் அதை யாராலும் மாற்ற இயலாது என்ற முடிவை மாற்றுகின்ற விதமாக புதிய சட்டவடிவு வந்துள்ளது. ஏற்கனவே வெளி வந்த திரைப்படங்களையும்

செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு காரணம் தடுப்பூசி பற்றாக்குறை தான். எனவே போர்கால அடிப்படையில் தடுப்பூசிகளை பெற்றுத்தராத ஒன்றிய அரசின் நிர்வாக திறமை இன்மையே இதற்கு காரணம் என்று தெளிவாக சொல்ல முடியும்.

தடுப்பூசி கண்டு பிடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வந்த துவக்கத்தில் மக்கள் தடுப்பூசி போடுவதற்கு அச்சப்பட்டனர், பயந்தனர், கிராமங்களில் பயந்து வீட்டிற்கு உள்ளே சென்று கதவை சாத்திக்கொண்ட நிகழ்வுகளையும் நாம் கண்டோம். ஆனால் தற்போது தடுப்பூசி செலுத்திக் கொள்வதற்கு விடியற்காலை முதலே வந்து வரிசையில் நின்று காத்திருந்து தடுப்பூசி போட்டுக்கொள்ள மக்கள் தயாராக உள்ள நிலையில் போதிய அளவு தடுப்பூசி இல்லை என்ற காரணத்தினால் மக்கள் திரும்பி செல்லுகின்ற அவலநிலையை ஊடகத்தில் காண்கிறோம். அதே நேரம் ஐரோப்பிய நாடுகள். அமெரிக்கா உட்பட ஆங்கிலம் பேசும் நாடுகளில் 80 சதவீதமான மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு மூன்றாவது அலைவராமல் அந்நாட்டு மக்களை பாதுகாத்தனர். ஆனால் இந்தியாவில் 80 சதவீதமான மக்களுக்கு தடுப்பூசி போடாத நிலையில் மூன்றாவது அலை வருவதை இந்தியாவில் தடுக்க முடியாதென்று விஞ்ஞானிகள் அறிவுறுத்தி வருகின்றனர். இதுவே இந்திய மக்களை ஒன்றிய அரசு எவ்வாறு பாதுகாக்கின்றது என்பதை நாம் அறிய முடிகிறது.

அதே நேரம் ஆளும் அரசை மட்டுமே குறைசொல்லிக் கொண்டு மக்களின் சுகாதார கலாச்சாரத்தின் பலவீனத்தை சொல்லாமல் இருக்க முடியாது. மக்களும், அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தர வேண்டும். ஆதரவு என்பது சுகாதாரத்துடன் சமூக இடைவெளியுடனும், முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டு மென்பதை மக்களும் உணர்ந்ததாக தெரியவில்லை.

முதல் அலையை விட இறப்பு சதவீதம் இரண்டாவது அலையில் அதிகமானது இதுவரையில் கொரானாவால் இறந்தவர்களின் எண்ணிக்கை மூன்று லட்சத்தை தாண்டியுள்ளது, இந்த எண்ணிக்கையானது முதல் உலகப்போரில் இராணுவ வீரர்களும், மக்களும் இறந்த எண்ணிக்கையை விட அதிகம்.

பெருந்தொற்று காலத்தில் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்ட போது வேலை இல்லாமல் ஊதியம் இழந்த பொழுது, அடுத்த வேலை உணவுக்கு மக்கள் பரிதவித்த போது ஒன்றிய அரசு என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யவில்லை. மாறாக மக்களின் நலன் என்பது கேள்விக்குறியான நிலையில் இந்திய சமூகம் வாழ்வது, தமிழ் சமூகம் வாழ்வது விஞ்ஞான உலகத்தில் அவலத்தின் உச்சம் என்றே சொல்ல வேண்டும். மக்களாகிய நாம் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள சமூக இடைவெளி விட்டு, முககவசம் அணிவோம். தடுப்பூசியை விரைந்து செலுத்திக் கொள்வோம். கொரானாவை வெல்வோம் வாழ்க்கை வாழ்வதற்கே.

**- தி.ஜெயசங்கர்**



மத்திய அமைப்பின் சார்பாக சுதந்திர போராட்ட வீரர் தோழர் என். சங்கரய்யாவை அவரது 100வது பிறந்த நாளில் நேரில் சந்தித்து நினைவு பரிசு வழங்கி வாழ்த்துப் பெற்றோம்.



# ஆகஸ்ட் 9 தேசத்தை பாதுகாப்போம்

**வி. குமார்,**
உதவி பொதுச் செயலாளர்/சிஐடியு

இந்திய நாடு விடுதலையடைந்து 75 வது சுதந்திர தினத்தை கொண்டாட தயாராகிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் மோடி ஒன்றிய அரசு அன்னிய கம்பெனிகளுக்கு நாட்டை அடகு வைக்க துணிந்துள்ளது. அன்னிய மூலதனம் நாட்டில் வலுவாக காலுன்றவும், அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுகின்ற அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

தேச விடுதலைக்காக எண்ணற்ற போரட்டங்கள் குறிப்பாக 1857 சிப்பாய் கலகம் முதல் 1942 வெள்ளையேனே வெளியேறு, 1946 கப்பற்படை எழுச்சி என்ற வரலாற்று சிறப்புமிக்க இயக்கத்தை இந்திய தேசம் கண்டது. குறிப்பாக 1942 ஆகஸ்ட் 9-ல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் செய் அல்லது செத்துமடி என்ற கோஷத்தை உரத்த குரலில் எழுப்பி பல்லாயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனை சகித்துக்கொள்ள முடியாத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போராட்டத்தில் ஈடுபட்ட பல அப்பாவி மக்களை கொலை செய்தது. ஆயிரக்கணக்கானவர்களை சிறையில் அடைத்தது.

இத்தகைய தியாக வரலாற்றை கொண்ட இந்திய தேசத்தை மீண்டும் அன்னியருக்கு தாரைவார்க்க மோடி அரசு முற்சித்து வருவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

## விவசாயிகள் போராட்டம்

இந்திய விவசாயிகள் ஒன்றிய அரசின் விவசாய விரோத கொள்கைகளான மூன்று வேளாண் சட்டங்களை திரும்பப் பெற கோரி 500-க்கும் மேற்பட்ட விவசாயிகளை உயிர்பலி கொடுத்து, வெயில், மழை, பனிப்பொழிவு, குளிர் எதையும் பொருட்படுத்தாமல் லட்சக்கணக்கான விவசாயிகள் வரலாற்று சிறப்புமிக்க போராட்டத்தை தலைநகர் டெல்லியில் 250 நாட்களாக தொடர்ச்சியாக போராடி வருவதை உலகமே உற்று நோக்குகிறது. இப்போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகிறது. துவக்கத்தில் ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான் என்ற நிலையிலிருந்து நாடு முழுவதும் விவசாயிகளின் போராட்டமாக பரிணமித்துள்ளது.

## மோடி அரசின் அவலம்

2019 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிப்பெற்று திரும்ப அதிகாரத்திற்கு வந்துள்ள மோடி அரசின் தலைமையிலான பாஜக வலதுசாரி அரசின் அணுகுமுறைக்கும். உலகின் மற்ற வலதுசாரி அரசுகளின் அணுகுமுறைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. பாஜக அரசு உலகளவில் செல்வாக்கிழந்த நவீன தாராளமய கொள்கைகளை வேகமாக அமலாக்கி வருவதோடு அதன் இந்துத்துவா நிகழ்ச்சி நிரலையும் கட்ட விழ்த்துவிட்டுள்ளது.

மோடி அரசானது பெருந்தொற்று காலத்தையும், அதனுடன் போடப்பட்ட பொது முடக்கக் காலத்தையும் புதிய தாராளமய நிகழ்வை வேகப்படுத்தி தொழிலாளர் சட்டத்திருத்தங்கள், உலக பொருளாதார நெருக்கடியில் ஆரம்ப ஆண்டுகளில் இந்தியாவில் வலிமை வாய்ந்த பொதுத்துறை நிறுவனங்களின் உற்பத்தியும். சேவையும் தேசிய மயமாக்கப்பட்ட உறுதியான வங்கித்துறையும் இந்தியாவை நிலைகுலைய விடாமல் பாதுகாத்து காப்பாற்றின. தேசத்தை காப்பாற்றிய பொதுத்துறைகளை தனியார் மயமாக்குவது, நிலவங்கி உருவாக்கி கார்ப்ப ரேட்டுகளுக்கு நிலம் தாரை வார்ப்பது ஆகிய மோசமான நடவடிக்கையில் மோடி அரசு இறங்கியுள்ளது.

அதே சமயத்தில் மக்களின் ஜனநாயக

உரிமைகள் நசுக்கப்படுகின்றன. அரசியல் சட்டமும் மற்றும் அது வழங்கியுள்ள உரிமைகளும் முழுமையாக உதாசீனப்படுத்தப்படுகின்றன. அரசியல் சட்டத்திற்கு துரோகம் இழைத்து, ஜம்மு - காஷ்மீருக்கான அரசியல் சட்டப்பிரிவு 370-ஐ ரத்து செய்து, மாநில சட்டமன்றத்தின் கருத்துக்களை கோராமல் அனைத்து மாநில தலைவர்களும் வீட்டு காவலில் வைத்து, மக்களை வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாமல் செய்துவிட்டு மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்துள்ளது. மாநில அரசுகளின் அதிகாரங்களை பறிக்கும் வகையில் பல மாநிலங்களை பிரித்து யூனியன் பிரதேசங்களாக மாற்ற திட்டமிட்டுள்ளது.

மக்களின் கோபவேசத்தையும் எதிர்ப்பையும் அடக்கிட சர்வாதிகார போக்கை கடைப் பிடிப்பது, நாடாளுமன்றம் மற்றும் அரசியல் சாசன சட்டப்பிரிவுகள் உள்ளிட்ட அனைத்து விதமான ஜனநாயக அமைப்புகளையும் சீர்குலைத்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கார்ப்பரேட்டுகள் மற்றும் நிலச்சுவான் தாரர்கள் ஆகிய அவர்களது வர்க்க நண்பர்களின் நலனை காத்திட தொழிலாளி வர்க்கம் மற்றும் மக்களின் ஜனநாயக உரிமைகள் மீது தாக்குதல் தொடுக்கிறது.

தொழிலாளர்களின் வேலை வாய்ப்புகள், வாழ்வாதாரம் மற்றும் பணி சூழல்கள் ஆகியன தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. விவசாயிகள் தற்கொலைகள் தொடர்கின்றன. சாதாரண மக்களின் ஜனநாயக மற்றும் மனிதவளங்கள் நசுக்கப்பட்டு வருகின்றன. மாற்று கருத்துக்களை முன் வைப்பதற்கான உரிமைகள் வெட்டப் படுகின்றன. சமீபத்திய உதாரணம் ஸ்டான் சுவாமி படுகொலை என்பது எல்லோரின் நினைவுக்கும் வரும்.

பாதுகாப்பற்ற உணர்வு குறிப்பாக தலித்துகள், சிறுபான்மையினர், ஆதிவாசிகள், பெண்கள் மற்றும் சமூகத்தின் இதர ஒடுக்கப்பட்ட பிரிவினரிடையே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. பாஜக அரசின் ஆதரவுடன் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் பல்வேறு அமைப்புகள் பகைமையை சமூகத்தில் தொடர்ந்து பரப்பி வருகின்றன. அரசியல், ஊழல், பண பலத்தின் வெறுக்கத்தக்க பயன்பாடு, மிரட்டல், குதிரைபேரம் மற்றும் சிபிஐ லஞ்ச ஒழிப்புக்குழு, தேர்தல் ஆணையம் மற்றும் நீதித்துறை போன்ற அமைப்புகளை அதிகாரத்தை கைப்பற்ற உபயோகிப்பது போன்றவை இதற்கு முன் எப்போதும் இருந்திராத அளவுக்கு இவர்களது ஆட்சியில் நடைபெறுகின்றன. தற்போது இவற்றிற்கெல்லாம் உச்சமாக, ஒட்டுமொத்த ஜனநாயக இயக்கங்களை நசுக்க இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்பு NSO நிறுவனம் தயாரித்துள்ள பெகாசால் வேவு பார்க்கும் கருவி மூலம் எதிர்கட்சித் தலைவர்கள், பத்திரிக்கை யாளர்கள், நீதிபதிகள், ஒன்றிய அமைச்சர்கள் என 200-க்கும் மேற்பட்டோரின் செல்லிடப்பேசி ஒட்டுக்கேட்கப்படும் கேவலமான செயலில் மோடி அரசு ஈடுபட்டுள்ளதை கண்டு நாடே வெட்கி தலைகுனிந்துள்ளது.

**தேசம் விற்பனைக்கல்ல**

பெரும்பாலும் பொருளாதாரத்தின் முக்கியமான மற்றும் கேந்திரமான துறையில் உள்ள பெட்ரோலியம், கனரகத் தொழிற்சாலை, மருந்துப் பொருட்கள், உருக்காலை, சுரங்கத் தொழில், கப்பல் துறை, மின்சாரம், விமான சேவை மற்றும் விமான நிலையங்கள், வங்கி, காப்பீடு மற்றும் இயற்கை வளங்களை தனியார் மயமாக்கிட பாஜக அரசு ஏற்கனவே முடிவு செய்துள்ளது. இது தவிர ரயில்வே, ராணுவ தளவாட உற்பத்தித்துறை ஆகியவற்றை தனியார் மயமாக்குவதற்கான முழுமையான திட்டங்கள் இறுதிப் படுத்தப் பட்டுள்ளன.

பொதுத்துறை நிறுவனங்களை விற்பனை செய்வதால் அரசுக்கு ஒரு முறை கிடைக்கும் வருமானத்திற்காக தொடர்ச்சியாக நீடித்த காலத்திற்கு அரசு கஜானாவிற்கு கிடைக்கும் வருமானத்தை இழக்க நேரிடும். சமூக நீதி, இடஒதுக்கீடு, வேலைவாய்ப்பு, மக்கள் நலத் திட்டங்கள் பாதிக்கப்படும். பொன் முட்டையிடும் வாத்தை கொல்வதைப் போன்ற நடவடிக்கையே இது. தேசநலனையும், பெருமளவிலான மக்கள் நலனுக்கும் நம்பிக்கைத் துரோகத்தை இழைக்கும் நடவடிக்கையின்றி வேறு என்ன இது?

**ஒற்றுமை காத்திடுவீர்**

அரசின் பொருளாதார கொள்கைகள் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமானவை. தற்போது தொழிலாளர் அனுபவித்து வரும் உரிமைகள். நலத்திட்டங்கள் அனைத்தும் சாதி - மதம், மொழி பாலினம், வேறுபாடின்றி ஒன்றுபட்டு போராடியதால் கிடைத்தவை. ஒன்றாக போராடினர். ஒன்றாக பல கஷ்டங்களை சந்தித்தனர். பல தியாகங்கள் புரிந்தனர். எதுவும் இலவசமாக கிடைக்கவில்லை.கொரானா பெருந்தொற்றால் வாழ்வாதாரம் இழந்துள்ள மக்கள் கடுமையான விலை உயர்வினாலும்,வேலையின்மையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை காப்பாற்ற அரசு முன் வரவில்லை. பற்றி எரியும் பிரச்சனைகளிலிருந்து அவர்களின் கவனத்தை திசைத்திருப்ப முயல்கிறது. இந்த காலத்தில் தான்

நமது சிறு- குறு விவசாயிகள் சாரந்த விவசாயத்தை கார்ப்பரேட் விவசாயமாக மாற்றும் இலக்குடன் கூடிய வேளாண் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மொத்தத்தில் மோடி தலைமையிலான பாஜக அரசு நாட்டையும், அதன் மக்களையும், அன்னிய ஏகபோக நிறுவனங்கள் உள்ளிட்ட பெரும் கார்ப்பரேட்டுகளிடம் அடகு வைக்கப் பார்க்கிறது.

நமது பொருளாதாரத்தையும், நமது சுய சார்பையும் அழித்து நமது மக்கள் மீது துன்பத்தை குவிக்கும் பேரழிவான கொள்கைகளிலிருந்து நாட்டை காக்க நமது நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டிய தேவை எழுந்துள்ளது. நமது தேசத்தின் செல்வத்தை உற்பத்தி செய்யும் தொழி லாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இந்த பேரழிவிலிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டிய முக்கிய பங்கு உள்ளது.

மோடி அரசின் மக்கள் விரோத தேசவிரோத கொள்கைகளுக்கு சவால்விடும் தொழிலாளர்களின் போராட்டக்களம் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பிற உழைக்கும் வர்க்கத்தினரின் ஆதரவுடன் வலுப்படுத்தப்பட வேண்டும்.

2021 ஆகஸ்ட் 9 ஆம் தேதியை அகில இந்திய விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து இந்தியாவை பாதுகாக்கும் தினமாக அனுசரிக்க சிஐடியு முடிவெடுத்தது. அதனடிப்படையில் ஜுலை 25 முதல் ஆகஸ்ட் 8 வரை தமிழகம் முழுவதும் பட்டித்தொட்டியெங்கும் 3 அமைப்புகளும் இணைந்து மக்களிடம் பிரச்சாரத்தை நடத்தியது. ஆகஸ்ட் 9 அன்று பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் விவசாயிகள்- விவசாயத் தொழிலாளர்களோடு இதர பிரிவினரும் பங்கேற்கும் வகையில் தமிழகத்தின் அனைத்து மாவட்ட வட்ட நகரங்களில் மனித சங்கிலி போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிஐடியு உள்ளிட்ட 11 மத்திய தொழிற்சங்கங்கள் டெல்லியில் கூடி போராட்டத்தை தீவிரப்படுத்த முடிவு செய்தது. அதன் அடிப்படையில் தமிழகத்தில் ஆகஸ்ட் 1 அன்று நடைபெற்ற அனைத்து தொழிற்சங்க கூட்டத்தில்.....

- ★ தொழிலாளர்களுக்கு விரோதமான நான்கு சட்ட தொகுப்புகளையும் மக்கள் விரோத வேளாண் சட்டங்களையும், மின்சார திருத்த சட்டத்தையும் ரத்து செய்!
- ★ வேலை இழப்பினால் ஏற்பட்டுள்ள வாழ்வாதார பிரச்சனைகளை தீர்வு செய், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கு, ஆட்குறைப்பு, சம்பள வெட்டு ஆகியவற்றை தடை செய்!
- ★ அரசு பணிகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பு.
- ★ 100 நாள் வேலை திட்டத்தை 200 நாட்களாக உயர்த்து, குறைந்தபட்ச ஊதியத்தையும் உயர்த்து
- ★ வருமான வரி கட்டுவதற்கான வருவாய் இல்லாத குடும்பங்களுக்கு மாதம் ரூ.7500/- வழங்கிடு
- ★ ஒரு நபருக்கு 10 கிலோ உணவு தானியம் வீதம் 6 மாதங்களுக்கு விலையில்லாமல் வழங்கு
- ★ மருத்துவத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்து, அனைத்து நோய்களுக்கும் கட்டணம் இல்லாத சிகிச்சையை உறுதிப் படுத்து.
- ★ எல்லோருக்கும் கட்டணமில்லா தடுப்பூசி செலுத்துவதை உறுதிப்படுத்து.
- ★ சுகாதார முன்கள பணியாளர்களுக்கு பாது காப்பான உடைகள் மற்றும் கருவிகள் வழங்கு, அவர்களுக்கும் காப்பீடு திட்டத்தை விரிவுப்படுத்து
- ★ பொதுத்துறை நிறுவனங்கள் அரசுத்துறை களை தனியார் மயப்படுத்துவதை கைவிடு.
- ★ கொடூரமான அத்தியாவசிய பாதுகாப்பு சேவைகள் அவசர சட்டத்தை திரும்ப பெறு.
- ★ பெட்ரோல் - டீசல் - சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை தடுத்து நிறுத்து.
- ★ அங்கன்வாடி, சத்துணவு, ஆஷா பணியாளர் உள்ளிட்ட திட்ட ஊழியர்களுக்கு தொழிலாளர் எனும் தகுதியை வழங்கு
- ★ ஐ.எல்.ஓ. இனக்க விதிகள் 87, 98, 109 ஐ செயல்படுத்து
- ★ மாநில கட்டுமான தொழிலாளர் நலவாரியம் மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியங்களை செயல்பட விடு, நல நிதியை பறிக்காதே.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மனித சங்கிலி - ஆர்ப்பாட்டம் என அறை கூவல் விடப்பட்டுள்ளது. ஒரு இயக்கம் சூடுபிடித்து உச்சத்தை எட்டுவது அதை நடத்துகின்ற மக்களின் கையில் தான் இருக்கிறது. தொழிற்சங்க உறுப்பினர்கள், விவசாயிகள் சங்க, விவசாய தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் எல்லோரும் பங்கேற்றால், அனைவரும் குடும்பத்தோடு பங்கேற்றால் அதிகார வர்க்கம் மண்டியிட்டே தீர வேண்டும்.

# ஆகஸ்ட் -10
# வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு!

**- எஸ்.இராஜேந்திரன்**

ஒன்றிய பிஜேபி அரசு மின்சார சட்ட திருத்த மசோதா 2021-ஐ நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதாக அறிவித்தது. இந்திய நாடு முழுவதும் இருக்கக்கூடிய தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் கூட்டமைப்பு ஜுலை 19 அன்று நாடு தழுவிய கண்டன ஆர்ப்பாட்டங்களும், ஜுலை 29 அன்று கருத்தரங்கம் நடத்துவதென்றும், ஆகஸ்ட் 10 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தம் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து தமிழகத்தில் கூடிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு தேசிய மின்சார தொழிலாளர் கூட்டமைப்பு அறிவித்த இயக்கங்களை நடத்த திட்ட மிட்டோம்.

அதனடிப்படையில் ஜுலை 19 அன்று அனைத்து இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. ஜ5லை 29 அன்று கோவை, மதுரை, நெல்லை, திருச்சி, ஈரோடு, வேலூர் மற்றும் விழுப்புரம் மண்டலங்களில் கருத்தரங்குகள் வெற்றிக்கரமாக நடைபெற்றது. சென்னையில் ஆகஸ்ட் 5 அன்றும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கென்னை தெற்கு1 மற்றும் 2, சென்னை மேற்கு, மத்திய சென்னை மற்றும் வடசென்னை ஆகிய இடங்களில் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 3400-க்கும் மேற்பட்ட முன்னணி ஊழியர்களிடம் இந்த வேலை நிறுத்தத்தின் அவசியத்தை விளக்கி பொது மக்களிடம் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் குறித்தும் விளக்கப்பட்டது.

கூட்டு நடவடிக்கைக்குழுவின் சார்பாக ஆயிரக்கணக்கான நோட்டீஸ்களும், போஸ்டர் களும், அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. திமுக, அதிமுக ஆகிய தொழிற்சங்கங்கள் மின்துறையை பாதுகாக்க ஒன்றிணைந்து பிரச்சாரம் செய்ததும் நல்ல அம்சம்.

மின்சார சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடாது என வலியுறுத்தி கடந்த ஆகஸ்ட் 3-ம் தேதியன்று இந்தியாவின் வடக்கு மண்டல மாநிலங்களும் 4-ந்தேதி கிழக்கு மண்டல மாநிலங்களும், 5-ந்தேதி மேற்கு மண்டல மாநிலங்களும் 6ந்தேதி தெற்கு மண்டல மாநிலங்களும், புதுடெல்லி நாடாளுமன்ற வீதியில் ஆர்பாட்டங்களை நடத்தினார்கள். தமிழகத்திலிருந்து மத்திய அமைப்பு, சம்மேளனம், எம்ப்ளாயீஸ் பெடரேசன், என்.எல்.ஓ, டாக்டர் அம்பேத்கர் சங்கம், பொறியாளர் கழகம், இன்ஜினியர்ஸ் யூனியன், மின்துறை பொறியாளர் அமைப்பு ஆகிய சங்கங்களிலிருந்து 42 பேர் கலந்து கொண்டு நாடாளுமன்ற வீதியில் முழுக்கங்களை எழுப்பினர்.

முன்னதாக டில்லியில் ஆகஸ்ட் 6 அன்று நடைபெற்ற தென் மாநில தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. இதில் பிரசாந் நந்திசவுத்திரி, ரத்னாகர், சைலேந்திர துபே, ஆகிய தலைவர்கள் பங்கேற்று பேசினார்கள். சிறப்பு அம்சமாக தோழர் இளம்மரம் கரீம், மாநிலங்களவை உறுப்பினரும் சிபிஐ(எம்) கேரள மாநில சிஐடியு பொதுச் செயலாளர் கருத்துரை வழங்கினார்.

இந்த சூழ்நிலையில் ஆகஸ்ட் 13 வரை நடைபெற உள்ள நாடாளுமன்ற கூட்டத் தொடரில் இந்த மசோதா நிறைவேற்றுவற்கான வாய்ப்பு இல்லை என தெரிய வந்த காரணத்தாலும் இந்த வேலை நிறுத்தத்தை ஒத்திவைப்பதென NCCOEE முடிவு செய்தது. ஆனால் அதே நேரத்தில் மின்துறையை பாதுகாக்க வேண்டும் என்றும், டில்லி காவல்துறையில் ஜனநாயக விரோத நடவடிக்கையை கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதென முடிவுகள் எடுக்கப்பட்டன.

நம்முடைய தீவிரமான போராட்ட தயாரிப்பு பணிகள் காரணமாகவும், விவசாயிகளின் போராட்டத்தின் காரணமாகவும் அந்த மசோதா ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய தயக்கம் காட்டியது. எனவே கிடைத்த இந்த கால அவகாசத்தைப் பயன்படுத்தி மக்களிடம் மின் நுகர்வோரிடம் சட்டத்தின் பாதிப்புகளை உரக்கச்சொல்வோம்! உரிமையோடு சொல்வோம்!

# மத்திய அமைப்பின் மாநில செயற்குழு முடிவுகள்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் கடந்த 01.08.2021 அன்று திருச்சியில் மத்திய அமைப்பின் மாநிலத் தலைவர் தோழர் தி.ஜெயசங்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தனது உரையில் மத்திய அரசின் நடவடிக்கைகள் மின்சார சட்டத்திருத்த மசோதா, ஸ்தாபன உறுப்பினர் உயர்வு உள்ளிட்டவைகள் குறித்து பேசினார். தொழிற்சங்க அங்கீகார தேர்தல் வந்தால் நாம் என்ன செய்ய வேண்டும் என்பனவற்றை விளக்கினார். அதனையடுத்து சிஐடியு தமிழ்மாநிலக்குழு பொதுச்செயலாளர் தோழர் ஜி. சுகுமாறன் அவர்கள் தொழிலாளர் நல சட்டங்கள் தொடர்பாகவும்,தொழிற்சங்க அங்கீகாரம் தொடர்பாகவும், மத்திய அரசின் நடவடிக்கைகளை தெரிவித்ததுடன் ஆகஸ்ட் 9-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தன்று நடைபெற உள்ள போராட்ட நிகழ்ச்சிகளையும் எடுத்துரைத்தார்.

பின்னர் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன் அவர்கள் கடந்த பிப்ரவரியில் நடைபெற்ற சேலம் செயற்குழுவிற்கு பின்பு நடைபெற்ற பணிகள் மின்சார சட்ட திருத்த மசோதா 2021 இயக்கம் தொடர்பாக தமிழகத்தில் நாம் எடுத்து வரும் நடவடிக்கை குறித்து விளக்கி பேசினார். இது தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்குகள் மற்றும் வேலை நிறுத்த தயாரிப்பு பணிகள் குறித்து பேசினார்.

மேலும் பகுதிநேர ஊழியர், ஒப்பந்த ஊழியர் பணி நிரந்தரம், கிளை பேரவை, தணிக்கை மற்றும் 2021 உறுப்பினர் பதிவு, களப்பிரிவு ஊழியர்களின் இருவழிப்பாதை ஆகியவற்றின் தொடர்பாகவும் ஸ்தாபன பலத்தை அதிகரிக்க வேண்டியதின் அவசியம் குறித்து அறிக்கை சமர்ப்பித்து பேசினார்.

செயற்குழு உறுப்பினர்கள் 43 தோழர்கள் அறிக்கையின் மீது விவாதத்தில் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்தனர். விவாதத்தில் வந்த கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் தொகுப்புரை வழங்கினார். மாநில செயற்குழு கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

- ஆகஸ்ட் 10-ல் மின்சார சட்டத்திருத்த மசோதா 2021ஐ கைவிடக் கோரி நடைபெற உள்ள வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக தமிழகத்தில் களம் காண்பது. இதன் ஆபத்துக்களை மக்களிடம் ஊழியர்களிடம் கொண்டு செல்ல ஆயிரக்கணக்கான நோட்டீஸ், போஸ்டர் வெளியிடுவது.
- மின் வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி ரூ.380/-ஐ தினக்கூலியாக மின்வாரிய நிர்வாகமே வழங்கிட வலியுறுத்தி வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு 17.08.2021 அன்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.
- கேங்மேன் பணியாளர்களின் கோரிக்கைகளான பயிற்சி காலத்தை மூன்று மாதங்களாக குறைக்க கோரியும், சொந்த மாவட்டத்திற்கு ஊர்மாறுதல் வழங்க கோரியும் 24.08.2021 அன்று வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு அனைத்து கேங்மேன் தொழிலாளர்களையும் திரட்டி அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.
- பகுதிநேர பணியாளர்களுக்கான இயக்கத்தை இந்த மாத இறுதியில் சென்னையில் நடத்துவது.
- மத்திய அமைப்பின் உறுப்பினர் பதிவு 2021-ஐ ஆகஸ்ட் 31-க்குள் முடித்து மாநில மையத்தில் ஒப்படைக்க வேண்டும்.
- மேட்டூர், நாமக்கல், நீலகிரி ஆகிய கிளைகள் உடனடியாக நிர்ணயிக்கப்பட்ட தேதியில் கிளைப் பேரவைகளை நடத்தி முடித்திட வேண்டும். அடுத்த ஆண்டு மாநில மாநாடு இருப்பதால் கிளைகள் தணிக்கை மற்றும் கிளை மாநாடுகளையும் **நோய் தடுப்பு கட்டுப்பாடுகளுடன்** நடத்திட வேண்டுகிறோம்.

மேற்கண்ட முடிவுகளை மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் அமலாக்கம் செய்ய வேண்டுகிறோம்.



# இணைப்புக் குழுவின் தலைவர்கள் மின்துறை அமைச்சரை சந்தித்தனர்

தமிழக மின் துறை அமைச்சர் மின் இணைப்புகள் எண்ணிக்கை அடிப்படையில் பிரிவு அலுவலகங்கள்,வட்ட அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள் உருவாக்குவதாகவும், கிராமப் புறங்களிலுள்ள பிரிவு அலுவலகங்களுக்கு ஒரே மாதிரியான மின் இணைப்புகளைக் கொண்டு இருக்கின்ற வகையில் பிரிப்பதாகவும், உதவி செயற்பொறியாளர்களின் கீழ் உள்ள பிரிவு அலுவலகத்தின் எண்ணிக்கையை கூட்டுவது அல்லது பிரிவு அலுவலகத்தின் தரத்தை உயர்த்துவது ( Upgradation) செய்ய உள்ளதாகவும் பத்திரிக்கையில் வந்த செய்திகளை கருத்தில் கொண்டு

கூட்டு நடவடிக்கைக் குழுவின் சார்பாக 04.08.2021 அன்று மின்துறை அமைச்சரை அனைத்து தொழிற்சங்க தலைவர்களும் சந்தித்தனர். மின்துறை அமைச்சர் சீரமைப்பு ( Reform) தொடர்பாக அதாவது பிரிவு அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள் அதிகரிப்பது தொடர்பாக பேசினார். தொழிற்சங்கங்கள் இந்த ஆலோசனைகள் எல்லாம் ஊதிய உயர்வு, வேலைப்பளுவுக்கான கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த கமிட்டி தான் தொழிற்சங்கங்களிடம் பேசி ஒப்பந்தம் காண நடவடிக்கை எடுக்க வேண்டும். பாரம்பரியமாக இருக்கும் நடைமுறையை மாற்றக்கூடாது என வலியுறுத்தி வந்தோம்.

## தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சென்னை

நாள்: **04.08.2021**

பெறுநர்
மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

ஐயா, வணக்கம்

பொருள் : மின்வாரியத்தில் புதிய நடைமுறைகளை அமல்படுத்துவதற்கு முன்பு தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த கோருதல் - தொடர்பாக

பார்வை : 1. இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை சென்னை அவர்களின் செய்தி வெளியீடு எண் 539/ நாள் 31.07.2021

2. (Per) CMD TANGEDCO Proceeding No.224, dated 07.12.2019

பார்வையில் கண்ட செய்திக்குறிப்பில் மின் இணைப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் பிரிவு அலுவலகங்களை ஒரே மாதிரியான அதாவது கிராமப்புறம், நகர்புறம் பேரூராட்சி என்ற வகையில் பிரிப்பதாகவும், அதே போல உப கோட்ட அளவில் மற்றும் கோட்ட அளவில் மின் இணைப்புகளை ஒரே மாதிரியான எண்ணிக்கையில் வைத்து பிரிப்பதாக செய்திகுறிப்பில் உள்ளது.

மின்வாரியத்தில் ஊதிய உயர்வு - வேலைபளு முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரிவுகள் மற்றும் உபகோட்டங்கள் மற்றும் கோட்டங்கள் உருவாக்கப்பட்டது. மலைப்பகுதியில் சம்மந்தப்பட்ட மேற்பார்வைய பொறியாளரின் ஆலோசனையின்படி களச்சூழலை கணக்கில் கொண்டு, மின் இணைப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பிரிவுகள் செயல்படவும் அதே போல கிராமப்புறங்களில் மின் மாற்றிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், நகரப்புறங்களில் மற்றும் பெருநகரங்களிலும் மின் இணைப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் பிரிவு அலுவலகங்கள் செயல்பட ஒப்பந்தம் காணப்பட்டது.

ஆனால் தற்பொழுது அறிவித்துள்ள இந்த அறிவிப்பு கடந்த 22.02.2018-ல் மின்வாரிய தொழிற்சங்கங்களுடன் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிரானது.

**எனவே பார்வை 2-ல் கண்டுள்ள வாரிய ஆணையின்படி ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைக் குழுவினை தொழிற்சங்கங்களோடு பேசி சுமூகமான முடிவினை எடுத்திட வாரிய நிர்வாகத்திற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் உத்திரவிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.**

**நன்றி!**

தங்கள் உண்மையுள்ள

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியூ)

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்(HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

மின்வாரிய பொறியாளர் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்




# மின்துறை அமைச்சரின் அறிவிப்பும்! சீரமைப்பும்!

தமிழக மின்சார வாரியத்தை புனரமைப்பதற்காக கூறி மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளார். ஆனால் மின்வாரியத்தில் சில நடைமுறைகள் மேற்கொள்கின்ற பொழுது வேலைபளு தொடர்பாக மின் இணைப்புகளின் எண்ணிக்கை மற்றும் மின் மாற்றிகள் எண்ணிக்கையை உயர்த்த நினைத்தால் வேலைபளு பகுதிக்குள் வருவதாலும், தொழிற் சங்கங்களுக்கு முறையே அழைப்பு கொடுத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். மின்வாரியத்தில் பொதுவாக வேலைபளு தொடர்பாக ஊதிய உயர்வு - வேலைபளு ஒப்பந்தம் ஏற்படும் போது மட்டுமே பேசப்படுவது வழக்கம். எற்கனவே மின்வாரிய நிர்வாகம் 07.12.2019 அன்று மின்வாரிய ஆணை 23 மூலமாக ஊதிய உயர்வு வேலைபளு பேச்சுவார்த்தைக்கான குழுவை அமைத்துள்ளது.

இந்தக்குழு தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி தீர்வு காணப்படுவது தான் சரியாக இருக்கும். ஆனால் மின்துறை அமைச்சரின் பத்திரிக்கைச் செய்தி வெளியீடு எண் 539 நாள் 31.07.2021-ன் படி வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கிராமப்புறங்களில் உள்ள பிரிவு அலுவலகங்கள் 7000 மின் இணைப்புகள் இருக்கின்ற வகையில் அமைப்பது என்றும் குறைந்த பட்சமாக ஒரு பிரிவில் 678 மின் இணைப்புகளும், அதிக பட்சமாக 51689 மின் இணைப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மின்துறை அமைச்சரை அனைத்து சங்கங்கள் சார்பாக 04.08.2021 அன்று சந்தித்து பேசினோம்.

678 மின் இணைப்புகள் உள்ள பிரிவில் LTCT மின் இணைப்புகள் 300-க்கும் மேற்பட்டு உள்ளது. 78 HT மின் இணைப்புகள் உள்ளது. வேலைபளு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த பிரிவு அலுவலகத்தில் தினந்தோறும் LTCT மின் இணைப்பில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். அதே போல மின் மாற்றிகளில் ஒரே மாதிரியான மின் இணைப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் பிரிப்பது தவறு என்றும் மின் பளுவின் அடிப்படையிலேயே மின் மாற்றிகள் நிறுவனப் படுகின்றன என்று தெரிவித்தோம்.

மேலும் மாவட்ட ரீதியாக மின் இணைப்பு களை கொண்டு வருவது நடைமுறைக்கு சாத்தியமல்ல அது கூடுதல் நிதிச்சுமையை கொடுக்கும் என்றும் சுட்டிக்காட்டினோம். புதிய மின் வட்டங்கள் மற்றும் மண்டல தலைமை பொறியாளர் அலுவலகங்கள் அமைப்பது வரவேற்கத்தக்கது. ஆயினும் முறையான பொறுப்புகளை அனுமதிக்காமல் ஏற்கனவே உள்ள மின் வட்டங்களிலிருந்து, மண்டலங்களிலிருந்து பொறுப்புகளை எடுப்பது சரியல்ல என தெரிவித்துள்ளோம்.


இது தொடர்பாக மின்வாரிய நிர்வாகத்தின் நடவடிக்கையை கூர்ந்து கவனித்து வருகிறோம். நம்மை போராட்டத்திற்கு மின்வாரிய நிர்வாகம் தள்ளாது என நம்புகிறோம்.

- எஸ்.இராஜேந்திரன்

# புலிவந்தாச்சு







புலிவந்தாச்சு

பொதுத்துறைகள் தனியார் மயமாக்கப் படும் என்றும், மின்சாரத்துறை தனியார் மயம் ஆக்கப்படும் என்றும் தொடர்ந்து 20 ஆண்டு களுக்கு மேலாக இடதுசாரி தொழிற்சங்கங்களால் முன் கூட்டியே சொல்லப்படும் அதனை தடுத்து நிறுத்துவதற்காக அவ்வப்போது பாராளுமன்றத்தில் கடுமையாக விவாதம் செய்து தடுத்து நிறுத்திய பெருமை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு. குறிப்பாக 2001 ஆம் ஆண்டு முதல் 2011-ம் ஆண்டு வரை திரு. மன்மோகன்சிங் ஆட்சி காலத்தில் முன்மொழியப்பட்ட தனியார்மய நடவடிக்கைகளை 67 நாடாளுமன்ற உறுப்பினர் களின் துணை கொண்டு தடுத்து நிறுத்தியது தொழிலாளி வர்க்கத்தின் மீது அக்கரை கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பதை யாரும் மறுக்க முடியாது.

இது வரையில் 20 அகில இந்திய வேலை நிறுத்தங்கள் செய்தோம். மின்சார மசோதா 2000-ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. மின்சார சட்டம் 2003-ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மின்சார சட்டம் 2003-ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மின்சார சட்டத்தை எதிர்த்து இடதுசாரி கட்சிகள் மட்டுமே பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித்து. இடதுசாரி தொழிற்சங்கங்கள் மக்கள் மன்றத்திலும், நீதி மன்றத்திலும் போராட்டத்தை தொடர்ந்தது. இடதுசாரி கட்சிகளைத் தவிர வேறு எந்த கட்சியும் மின்சார சட்டத்தை எதிர்க்கவில்லை. மாறாக ஆதரித்து வாக்களித்தன (தமிழகம் உட்பட) அப்போதெல்லாம் போராடிய இடதுசாரி கட்சிகளையும், போராடிய இடதுசாரி தொழிற்சங்கங்களையும் எள்ளி நகையாடினார்கள். பொய் மூட்டைகளை அவிழ்த்து விடும் கம்யூனிஸ்டுகள் என்று பிரச்சாரம் செய்தார்கள். அவ்வாறு சொன்னவர்கள் கடந்த இரண்டாண்டு களாக இடதுசாரி தொழிற்சங்கங்களும், கம்யூனிஸ்ட்களும் சொன்னது உண்மை தான். அவர்களின் வாக்கு என்றுமே பொய்த்து போனதில்லை என்று முதலாளித்துவ கட்சியைச் சார்ந்த,முதலாளிகளுக்கு ஆதரவாக பேசியவர்கள் எல்லாம் இன்று ஓரணியில் திரண்டு மின்துறை தனியாருக்கு விடக்கூடாது என்றும் வங்கி, இரயில்வே, நிலக்கரி, இராணுவம்,கப்பல், வான்வழி, எண்ணெய் நிறுவனங்கள், இன்சூரன்ஸ் நிறுவனங்கள் தனியாருக்கு விடக்கூடாது என்று போராடி வருகின்றார்கள். அடுத்தக்கட்ட போராட்டத்திற்கும் தயாராகி வருகிறார்கள்.

புலிவருது புலிவருது என்ற போது நம்பாதவர்கள் புலி நம்மை அடிக்க வருவதை உணர்ந்த போது எதிர்க்க துணிந்து நிற்பதை கண்டு அவர்களை பாராட்டமல் இருக்க முடியாது. ஒன்றிய அரசு, இமாலாய வலுவாக இருக்கின்ற போதும் அவர்களை எதிர்த்து போராடுகின்ற தெம்பும் திராணியும் தொழிலாளி வர்க்கத்துக்கு உண்டு என்பதை 2019 -ம் ஆண்டு முதல் உத்தரபிரதேச மின்வாரிய ஊழியர்கள் நமக்கு சாட்சியாக உள்ளனர். போராட்டங்களை தொழிலாளி வர்க்கம் எப்பொழுதுமே தேடிச் செல்வதில்லை. தொழிலாளி வர்க்கத்தின் மீது தாக்குதல் தொடுக்கும் போது சிதறி இருக்கின்ற தொழிலாளி வர்க்கம் ஒன்றாக திரண்டு யானை பலம் பெற்று ஒன்றிய அரசை எதிர்த்து போராடும் வல்லமை கொண்டது. இதை யாராலும் தடுத்து நிறுத்திட முடியாது. இதைத்தான் உதாரணமாக டெல்லியில் நடைபெறும் விவசாயிகளின் போராட்டம் 270 நாட்களை கடந்து நம் கண்முன்னே காட்சியாக நிற்கின்றது. தொழிலாளி களையும், விவசாயிகளையும் வஞ்சித்து விட்டு

எந்த அரசும் வாழ்ந்ததாக வரலாறு கிடையாது. அதை மெய்ப்பிக்கும் காலம் விரைவில் வர உள்ளது.

மின்சாரம் உள்ளிட்ட அனைத்து பொதுத்துறைகளும் இந்தியாவின் இதயம் போன்றது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி என்பதும், இந்தியாவின் இறையாண்மை என்பதும் பொதுத்துறைகளை காப்பது மூலமே நீடிக்க முடியும். இந்த அரசு அனைத்து பொதுத் துறைகளையும் தனியாருக்கு விற்றுவிட்டு, தனியார்களின் இலாப வேட்டைக்கு துணை போகும் இந்த அரசின் கொள்கையை மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்திய முதலாளித்துவம் என்பது கார்ப்பரேட் முதலாளித்து வமாக வளர்ந்து இந்திய அரசாங்கத்தை எதிர்காலத்தில் ஆட்டி படைக்கும் வல்லமை படைத்த கார்ப்பரேட் முதலாளிகளாக அம்பானியும், அதானியும், டாடாவும், பிர்லாவும், இது போன்ற இன்னும் பிற முதலாளிகளுக்கும் சேவை செய்தவற்காக ஒன்றிய அரசு செயல்படுமேயானால் அப்படிப்பட்ட அரசை, அகற்றுவது தான் தொழிலாளி வர்க்கத்தின், விவசாய வர்க்கத்தின் முதற்பணியாகும்.

இந்தியா முழுவதும் மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்கள், மாநில அரசு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் மத்திய மாநில அரசு ஊழியர்கள் ஒன்றாக இணைந்து குடும்பமாய் ஓரணியில் திரண்டு போராட்டக்களம் அமைத்தால் ஒன்றிய அரசு தாங்காது. உலகம் முழுவதுமுள்ள அரசுகள் மோடி அரசின் நிர்வாக திறமை யின்மையை வெளியே கொண்டு வந்த பிறகும் கொரானா நோய் பரவலின் போது அவர்கள் செயல்கள் அம்பலப்பட்ட பிறகும் மீண்டும் முதலாளிகளுக்கான அரசாக செயல்படுவது இந்தியாவில் தொழிலாளளி வர்க்கம் போராடுவது தவிர்க்க முடியாதது.

இதுவரை என் வீடு, என் மக்கள், என் உறவினர், என் நிறுவனம்,என்று மட்டுமே சுயநலமாக பேசி வந்த தொழிலாளி வர்க்கம் தற்போது ஒன்றிய அரசு கற்றுக்கொடுத்த பாடத்தால், கொரானா தொற்று நோய் கற்றுக் கொடுத்த பாடத்தால் என் நாடு, என் மக்கள், மக்களுக்கான பொதுத்துறைகள் என்று பொது நலத்துடன் சிந்திக்க துவங்கி பரந்து விரிந்த ஒற்றுமையைக்கட்ட தயாராகி விட்டது தொழிலாளி வர்க்கம். வறுமையின் சதவிகிதம் கூடியது, பசியும் பட்டினியும் கூடியது, பல கோடி வேலை வாய்ப்புகள் அழிந்தது. கொரானா நோய் தொற்றால் வாடிப்போன மக்கள், ஆட்டங்கண்ட தமிழ் சமூகம், இந்திய சமூகம், ஒரு பக்கம், இந்த கொள்ளை நோய் காலத்திலும் அம்பானிக்கும், அதானிக்கும் பல லட்சம் கோடிகள் வங்கி கடன்களை தள்ளுபடி செய்த ஒன்றிய அரசு மறுபுறம் இந்த அரசு மக்கள் வறுமையில் இறந்தாலும் முதலாளிகளுக்கு சேவகம் செய்வதில் கண்ணும் கருத்துமாக உள்ளது. இந்திய மண்ணில் மேலை நாட்டு பணியில் ஒன்றிய அரசு செயல்படுவதை இனியும் மக்கள் ஏற்கமாட்டார்கள்.

பட்டுகோட்டையார் சொன்னது போல **“விழித்துக் கொண்டோரெல்லாம் பிழைத்துக் கெண்டார்”**என்ற சத்திய வரிகளின் படி மின்சார ஊழியர்களும் பொறியாளர்களும் விழித்துக் கொண்டார்கள் அதன் ஒரு பகுதிதான் 29.07.2021 அன்று நடந்த மண்டல அளவிலான கருத்தரங்கம். அதன் பிறகு 05.08.2021 அன்று நடந்த சென்னை கிளைகள் கருத்தரங்கம், இறுதியில் அகில இந்திய வேலை நிறுத்தம். பாராளுமன்றத்தில் பெகாஸ் ஸ்பைவர் ஒட்டு கேட்பதற்காக ஒன்றிய அரசு பயன்படுத்தியதா என்ற விவகாரம் அவையை முடக்கியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தனக்கு வாக்களித்த மக்களையே இஸ்ரேல் துணை கொண்டு வேவு பார்ப்பது இந்திய வரலாற்றில் இதுவே முதல் முறை. இந்த நிலையில் பாராளுமன்றத்தில் மின்துறை உள்ளிட்ட பொதுத்துறைகள் தனியார்மயம் என்ற சட்டதிருத்தம் நிறைவேற்றுமானால் அப்படிப்பட்ட புலியை வீழ்த்துவதைத் தவிர தொழிலாளி வர்க்கத்திற்கு வேறு எந்த மார்க்கமும் கிடையாது.

எனவே முதலாளிக்கு ஆதரவானவர்களும் சரி, சிறுகுறு முதலாளிகளும் சரி அனைவருமாக ஒன்றிணைந்து பொதுத்துறைகளை பாதுகாக்கும் போராட்டத்தில் ஈடுபடுவது என்பது இந்திய தேசத்தின் மூன்றாவது சுதந்திர போராட்டமாகும். இந்த தேசத்தை நேசிக்கும் அனைவரும் மின்துறை உள்ளிட்ட பொதுத்துறைகளை பாதுகாக்கும் போராட்டத்தில் இணைந்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

**- தி.ஜெயசங்கர்**

## நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

ஆகஸ்ட் 13 வரை நடைபெற வேண்டிய நாடாளுமன்றம் நியாயமாக கேள்வி எழுப்பிய எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பதில் அளிக்க இயலாமல் ஒத்திவைப்பு... வெட்கம்! வெட்கம்!




உலகில் இதுவரை மூன்று மிகப்பெரிய வைரஸ் பெருந்தொற்று காலமாக இருந்துள்ளது. சுதந்திரத்திற்கு முன்பாக 1920களில் ஒரு முறையும் சுதந்திரத்திற்கு பின்பு 1960களில் ஒரு முறையும் மூன்றாவதாக 2020-ல் கொரானா வைரஸ் பெருந்தொற்று (Covid -2019) வந்து உலக மக்களை அச்சுறுத்தி இன்று வரை நீடிக்கிறது. உலகம் முழுவதும் பெருந்தொற்று ஏற்பட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்ட சூழலில் அதற்கான தடுப்பூசிகளை, நவீன விஞ்ஞானத்தின் மூலம் கண்டு பிடித்து இந்த உலகிற்கு வழங்கியது அறிவு உலகம். தடுப்பூசிகளை மக்களுக்கு அளிப்பதில் வளர்ந்த ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்க நாடுகளும் மக்களின் நலன் சார்ந்து அமல்படுத்தினர். இந்தியாவில் மட்டும் தான் தடுப்பூசிகளை மக்களுக்கு அளிப்பதில் தொழில்சார்ந்து இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு முதலாளிகளின் நன்மைக்காக அரசு செயல்பட்டது இந்திய வரலாற்றில் இது தான் முதல் முறை.

பெருந்தொற்று காலம் வந்த பொழுதும் இந்தியாவில் பிளேக், காலரா நோய்கள் வந்த போதும் அரசு மக்களை காப்பதற்காக அதிக அக்கரையுடன் செயல்பட்டு தடுப்பூசிகளை மக்களுக்கு இலவசமாக வழங்கின. தற்போதும் மக்கள் இலவசமாக வழங்கிட வேண்டுமென்றும் உரத்த குரலில் தொடர்ந்துசொன்னதால் ஒன்றிய அரசு பின்வாங்கி தடுப்பூசிகளை இலவசமாக வழங்கிடுவோம் என்று அறிவித்தது. கொரானா 2வது அலையின் தாக்கம் குறைந்து வந்துள்ளது. தளர்வுகள் படிப்படியாக அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது அலை வருமா வராதா? என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. பள்ளி, கல்லூரிகள் இன்று வரை திறக்கப்படவில்லை, இந்த சூழ்நிலையில் தடுப்பூசிகளை அனைத்து மக்களுக்கும் போடுவது என்ற பிரதான நோக்கத்தோடு ஒன்றிய அரசு செயல்படுவதாக தெரியவில்லை. 45 வயதுக்கு மேற்பட்டவர் களுக்கும், 18 வயதை கடந்தவர்களுக்கும் முதல் முறை தடுப்பசி (First Dose) இன்றும் போட்டு முடிக்கப்படவில்லை. 12வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்று வரை அறிவிக்கப்படவில்லை. இந்தியாவின் 133 கோடி மக்கள் தொகையில் 100 கோடி மக்களுக்கு தடுப்பூசி போட்டு முடிப்பதற்கு இன்னும் எத்தனை மாதங்கள் ஆகும் என்று யாருக்கும் தெரியாது. இந்தியா ஒரு மிகப் பெரிய ஜனநாயக நாடு, கொரானா கொள்ளை நோயில் இருந்து காப்பதற்கு தடுப்பூசியைத்தவிர வேறு எந்த மார்க்கமும் இல்லை, எந்த கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்று நன்கு அறிந்த பின்னரும் உலக சுகாதார நிறுவனத்தால் ( WHO ) அனுமதி அளிக்கப்பட்ட 12-க்கும் மேற்பட்ட தடுப்பூசிகளை இறக்குமதி செய்து இந்திய மக்களுக்கு வழங்கி இருக்க முடியும். அவ்வாறு செய்யாமல் மெத்தனப் போக்கை கடைப்பிடிக்கும் ஒன்றிய அரசை எவ்வாறு புரிந்து கொள்வது, இந்திய நாட்டில் 8 மாநிலங்களில் மட்டும்தான் அவற்றின் மக்கள் தொகையில் 10சதவீதத்திற்கும் அதிகமாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. உத்தரப்பிரதேசம், ஜார்கண்ட், பஞ்சாப், மகராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களில் 8 சதவீதத்திற்கும் குறைவாகவே

காட்சிகள் நீக்கவும், மறு தணிக்கை செய்யவும் கூடிய உச்சபட்ச அதிகாரத்தை கொண்டதாக உள்ளது. எளிமையாக சொல்வதென்றால் கதாசிரியர்களின், இயக்குநர்களின் கற்பனை வளத்தை காட்சி வடிவங்களை, உயிர் ஓவியங்களை எடுக்க விடாமல் கழுத்தை நெரிக்கின்ற செயலாகும். திரைக்கலை என்பது மிக வலிமை வாய்ந்த மக்களிடம் எளிமையாக கொண்டு செல்லும் காட்சி வடிவ துறையாகும்.

முன்னூறு ஆண்டுகால வரலாற்றை மூன்று மணி நேரத்தில் சுருங்கச்சொல்லி எளிதாக புரிய வைக்கின்ற கலைத்துறையை முடக்குவதன் மூலமாக, கற்பனைகளை நசுக்குவதன் மூலமாக, பிரதமர் மோடிக்கு எதிராக, ஒன்றிய அரசுக்கு எதிராக மக்கள் திரளுவதை ஒரு போதும் தடுத்து நிறுத்த முடியாது. ஜெர்மனியின் ஹிட்லரும் இதே போலத்தான் மக்கள் எதை செய்ய வேண்டும், எதை சிந்திக்க வேண்டும் என முடிவு செய்தார். ஆனால் மக்கள் ஜனநாயகமே வென்றது. ஹிட்லருக்கு எதிராக உலக நாடுகள் போர்க்கொடி தூக்கியது. அதே நேரம் ஜெர்மனியில் ஹிட்லருக்கு எதிராக அந்நாட்டு மக்கள் சுதந்திரம், ஜனநாயகம், கருத்துரிமை, பேச்சுரிமைக் கேட்டு வீதிகளில் கிளர்ச்சி பிரச்சாரம் செய்தனர். மக்களுக்கு எதிரான, ஜனநாயகத்திற்கு எதிராக யாரெல்லாம் ஆட்சி செய்கின்றார்களோ அவர்களை மக்கள் ஒரு போதும் மன்னிப்பதில்லை.

சினிமா கலைத்துறையின் வலிமை என்பது பிரமிக்கத்தக்க வகையில் உள்ளது. நமது சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் காலம் காலமாக இருந்து வருகிறது. ஏற்றத்தாழ்வுகள் தவறு என்றும், அதை ஒழிக்க வேண்டுமென்றும் அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. அதை எளிமையாக, மக்களுக்கு புரிகின்ற வகையில் மக்கள் ஏற்றுக் கொள்கின்ற வகையில் சொல்லும் வலிமை படைத்த சாதனம் தான் சினிமாத்துறை. மக்களின் பண்பாடு கலாச்சாரம் போன்ற அனைத்தையும் காட்சி வடிவமாக சொல்லி மக்களின் மனம் கவர்வதே சினிமா கலைத்துறையாகும்.

இந்த சட்ட திருத்தத்தின் அடிப்படை நோக்கமே சமூக பிரச்சனைகளைப் பற்றியும் அரசியல் கொள்ளையர்களை பற்றியும் சினிமா பேசிவிடக் கூடாது என்பதாகவே நாம் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சமூகத்தின் பிரச்சனைகளை பேசிய படங்களான அசுரன், கர்ணன் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை போன்ற திரைப்படங்கள் தேசிய அளவில் கவனத்தை ஈர்த்தது. உலக அளவில் பாராட்டு பெற்றது. அதே போல அரசியல் மோசடிகளையும் அரசின் தவறான கொள்கைகளையும் படம் பிடித்து காட்டிய சில படங்களான ஜோக்கர், நெல்சன் மண்டேலா, இந்தியன் போன்ற திரைப்படங்கள் லஞ்சம், ஊழல், அரசின் வரிப்பணங்களை தவறாகப்பயன் படுத்துவது போன்றவற்றை வெளியே கொண்டு வந்தது. திரைப்பட கலைத்துறை மீதான புதிய சட்டத்திருத்தம் வருமேயானால் மேலே குறிப் பிட்டது போன்ற திரைப்படங்கள் எதிர்காலத்தில் வரவே வராது. வெறும் மசாலாக்கள் தடவிய பிற்போக்கு கொள்கை கொண்ட ஆளும் ஆட்சியாளர்களுக்கு வால் பிடிக்கும் படங்கள் வருமேயானால் சினிமா கலைத்துறை அழிந்து போவதைத் தவிர வேறு வழியில்லை.

அமெரிக்கா உட்பட மேலை நாடுகளில் வெளி வரும் படங்கள் அனைத்தும் சமூகம் சார்ந்த பிரச்சனைகள், அரசியல் சார்ந்த கொள்கை வேறுபாடுகள், மத பிற்போக்குத்தனம், இராணுவ தலையீடு போன்ற உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்கள் உட்பட திரைக்கலையில் கொண்டு வந்து மக்களுக்கு சேர்க்கப்படும் ஜனநாயகம் உள்ளதை காண முடிகின்றது. இந்த ஜனநாயகத்தை இந்திய ஆட்சியாளர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கலைத்துறை மீதான தாக்குதல் என்பது மக்கள் மிதான மறைமுக தாக்குதலாகவே நாம் கருத வேண்டியுள்ளது.

எனவே திரைக்கலை மீதான சட்டதிருத்த மசோதாவை எதிர்த்து திரைப்பட கலைஞர்களோடு நாமும் கரம் கோர்ப்போம். சட்டதிருத்தம் திரும்பப் பெறும் வரை போராட்டகளம் காண்போம்.

**- தி.ஜெயசங்கர்**



சேலம் மின்திட்டத்தில் சேலம் மேற்கு கோட்டம், சூரமங்களம் பிரிவு அலுவலகத்தில் பகுதி நேர ஊழியராக **அலமேலு** என்பவர் பணி செய்து 31.6.2021 அன்று பணி ஓய்வு பெற்றார். நமது சங்கம் செய்த உதவியை பாராட்டி மத்திய அமைப்பின் மாத இதழ் மின்கதிர் பத்திரிக்கைக்கு நன்கொடையாக ரூ. 500/- அளித்தார். வாழ்த்துக்கள்

# சமூக செயல்பாட்டாளர்களை ஒடுக்குவது அரசின் அறம் அல்ல!

இந்தியாவில் சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே 500 ஆண்டுகளுக்கு மேலாக சமூக செயல்பாட்டாளர்கள் இயங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மதம் சார்பாக, இனம் சார்பாக, சமூக சீர்திருத்தம் சார்பாக, அல்லது இவற்றையெல்லாம் கடந்த சமூகத்தின் மேன்மைக்காக பணியாற்றி வருபவர்கள். உலகம் முழுவதும் அனைத்து நாடுகளிலும் இப்படிப்பட்ட அமைப்புகள் உண்டு. வளர்ந்த நாடுகள், வளர்ந்து வரும் நாடுகளுக்கும் வறுமையின் பிடியில் உள்ள ஆப்பிரிக்கா கண்டத்தின் கென்யா, உகாண்டா, போன்ற பல்வேறு நாடுகளுக்கும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக உதவி செய்து வருகின்றனர். இவர்களை பொதுவாக சமூக செயல்பாட்டாளர்கள் என்று அறியப்படுகிறார்கள்.

1950-ன் பகுதியில் கிறிஸ்தவ மதத்தில் உள்ள ஒரு சில பிற்போக்கு கருத்துக்களுக்கெதிராக, கிறிஸ்தவ மதகுருமார்களின் நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்காவில் மார்டின் லூதர் என்பவர் கிறிஸ்துவ மக்களை ஒன்றிணைத்து போராடினார். அவர்களின் கருத்துக்கள் பிரபலமாக ஏற்கப்பட்டது. பெரும்பகுதி மக்கள் கருத்துக்கள் அவரது கருத்துக்கு ஆதரவாக இருந்ததால் மதகுருமார்கள், மார்டின்லூதர் கிங் கருத்துக்களை ஏற்று மாற்றங்களை கொண்டு வந்தனர். இவரும் ஒரு சமூக செயல்பாட்டாளர்.

இந்தியாவின் வடகிழக்கு பகுதியான நாகலாந்து என்று சொல்லப்படுகின்ற மாநிலத்தில் பெரும்பகுதியான மக்கள் நாகர்குல மக்கள், நாகப்பாம்பை குல தெய்வமாக வழிபடக்கூடிய மக்கள். மலைப்பகுதியில் உள்ள இந்த மாநிலம் கல்வி வளர்ச்சியற்ற, தொழில் வளர்ச்சியற்ற, நாகரீக வளர்ச்சியற்ற பிற்போக்குத்தனங்களை உள்ளடக்கிய மக்களாக வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு கல்வியை ஊட்டி விட்டால் அனைத்திலும் இவர்கள் வளர்ச்சியடைவார்கள் என்று கிறிஸ்துவமத செயல்பாட்டாளர்...... கருதினார். அவர் நாகலாந்து மாநிலத்திற்கு குடும்பத்துடன் இடம் பெயர்ந்தார்.

கல்வியற்ற காட்டுமிராண்டி வாழ்க்கை வாழ்ந்து வந்த அவர்கள் மத்தியில் காட்டுக்கு நடுவில் வீடுகட்டி அவர்களோடு வாழ்ந்து வந்தார். நோய்வாய் பட்ட மக்களுக்கு ஆங்கில மருத்துவ சிகிச்சையளித்தார். அதனால் மக்களோடு மக்களாக அவர் கலந்து பள்ளிக்கூடம் அமைத்து கல்விக்கண் வழங்கினார். இன்று நாகலாந்து மாநிலத்தில் ஓரளவு கல்வி பயின்ற மக்களாக இருக்கிறார்கள் என்று சொன்னால் ஓரளவு நாகரீகம் அடைந்த மக்களாக உள்ளனர் என்று சொன்னால் அதற்கு காரணம் சமூக செயற்பாட்டாளர்....

சமூக செயற்பாட்டாளர்களின் அடிப்படை நோக்கமானது வறுமையில் வாடுகின்ற, சமூகத்தில் பின் தங்கியுள்ள கல்வி கிடைக்காமல் உள்ள மக்களுக்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவும், சராசரி மக்களாக வாழ்வதற்கான தெம்பையும், திராணியையும் அளிப்பது தான் இவர்களது பணி. அதே போல அரசாங்கம் கொண்டு வரும் பல்வேறு சலுகைகள் உதாரணமாக ரேசன் அட்டை, மின்சாரம், குடிநீர் குழாய்கள் இலவச பொதுக்கழிப்பறைகள், சுகாதார திட்டங்கள் போன்றவை இல்லாத கிராமங்களுக்கு கொண்டு செல்வது இவர்களது பணி. உண்மையில் இந்த பணிகளை அரசாங்கம் செய்ய வேண்டியது. அரசாங்கத்தின் ஊழியர்கள் செய்ய வேண்டியது. அவர்கள் செய்யாத போது சமூகப்பணியாளர்கள் செய்து அவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளி ஏற்றுகின்றனர்.

அந்த வகையில் ஸ்டேன்ஸ் லூர்துசாமி ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்காக தனது வாழ்க்கையை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டவர். கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆதிவாசி மக்களோடு இரண்டற கலந்து அம்மக்கள் வாழ்க்கை மேன்மை அடைவதற்காக சமூகப்பணி ஆற்றி வந்தவர். இவர் பின்னால் இவரின் செயல்களை கண்டு, இவரின் அரும்பணியைக் கண்டு பல்லாயிரம் ஆதிவாசிக் குடும்பங்கள் வளர்ச்சி கண்டது. ஒடுக்கப்பட்ட மக்களாக இருந்த இவர்கள் அரசின் நல திட்ட உதவிகள் கிடைக்கப் பெறாமல் இருந்தவர்கள். ஸ்டென்ஸ் லூர்துசாமி அவர்களின் நடவடிக்கை காரணமாக படிப்படியாக மாற்றங்களை கொண்டு வந்தார். அவர்களுக்கு நம்பிக்கை வெளிச்சத்தை உருவாக்கினார். ஜார்க்கண்ட் மாநிலத்தில் வேறொரு பகுதியில் ஒடுக்கப்பட்ட பழங்குடியின மக்களுக்காக ஆயுதம் ஏந்தி ஒரு குழு போராடி வந்தது. மாநில அரசும், மத்திய அரசும், ஸ்டேன்ஸ்

லூர்துசாமி அவர்களின் மக்கள் செல்வாக்கை கண்டு பயந்தனர். இந்த நிலையில் ஒன்றிய அரசு ஜார்ஜ்கண்ட் மாநிலத்தில் ஆதிவாசிகள் குடியிருக்கும் பகுதியில் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியில் பூமிக்கடியில் கனிம வளங்கள் இருப்பது கண்டு பிடித்தது. அதற்கான ஆரம்பகட்ட பணிகளை ஒன்றிய அரசு செய்து கனிம வளங்கள் இருப்பதை உறுதி செய்தது. ஸ்டேன்ஸ் லூர்துசாமி இருக்கின்ற வரையில் கனிம வளங்களை எடுப்பது சாத்திமில்லை என்பதை உணர்ந்த ஒன்றிய அரசு அதற்கான திட்டமிடலை துவங்கியது.

கனிம வளங்கள் இருப்பதை கண்டுபிடித்த ஒன்றிய அரசை எதிர்த்தும், மாநில அரசை எதிர்த்தும் மக்களை திரட்டி போராடினார். ஆதிவாசி பழங்குடியின மக்களை அங்கிருந்து அகற்றிவிட்டு கனிம வளங்களை எடுப்பதற்கான முற்சியை ஒன்றிய அரசு வலுவாக எடுத்தது. இது தொடர்பாக ஸ்டேன்ஸ் லூர்துசாமி அவர்கள் அரசாங்கத்திற்கும், அரசு அதிகாரிகளுக்கும் பல்வேறு கடிதங்களை எழுதினார். வனத்தில் வசிப்பதும், வனத்தை பாதுகாப்பதும் பழங்குடியின மக்களின் கலாச்சாரம் பண்பாட்டை பாதுகாப்பதும் மிகவும் முக்கிய மானது காடுகளை அழிப்பதனால் அனைத்தும் களவாடப்படும் ஆபத்து உள்ளது. அதனால் பழங்குடியின மக்கள் அங்கிருந்து வெளியேற மாட்டார்கள் என்று உறுதிபட தெரிவித்தார். இதன் காரணமாக ஒன்றிய அரசு ஸ்டேன்ஸ் லூர்து சாமி அவர்களின் மடிக்கணினியை (LAP TOP) மாவோயிஸ்ட் டுகளுடன் தொடர்புள்ளதாக ஒரு கடிதத்தை அவருக்கே தெரியாமல் MALWARE மூலம் செலுத்தி உப்பா சட்டத்தின் மூலம் அவரை கைது செய்து சிறையில் அடைத்த 84 வயதான அவர் சிறையில் அடைக்கப்பட்டு அவரது கைகளையும், கால்களையும் இரும்பு கம்பியால் கட்டினர். கடந்த 8 மாதங்களாக சிறையில் இருந்த அவர் நோய் வாய்ப்பட்டு கொரானா நோயால் தாக்கப்பட்டு கைகள் நடுங்கிய நிலையில் அவருக்கு ஜாமீன் கேட்ட போதும், ஜாமீன் வழங்க மறுத்தது நீதிமன்றம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்ட போது தண்ணீர் பருக STRAW கேட்டதற்கு தர மறுத்த காவல் துறையின் செயல் கண்டனத் திற்குரியது. இந்த நிலையில் அவர் 05.07.2021 அன்று மரணமடைந்தார். நோய்வாய் பட்ட நிலையில் அவருக்கு சிகிச்சை தர மறுத்த காவல் துறையும், ஜாமீன் தர மறுத்த நீதி மன்றத்தின் செயலும் கொடுமையானது. இந்த ஈவிரக்கமற்ற செயலை இந்திய மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

ஸ்டேன்ஸ் லூர்து சாமி அவர்களின் மரணத்தை கண்டித்து இந்தியா முழுவதும் போராட்டங்கள் வெடிக்க துவங்கியுள்ளது.

இன்றைக்கு இந்தியா ஓரளவுக்கு வளர்ந்து நிற்கின்றது அல்லது சமூக அக்கறையுடன் செயல்படுகிறது என்று சொன்னால் அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் அதில் ஒரு முக்கிய காரணமானது ஸ்டேன்ஸ் லூர்துசாமி போன்ற சமூக செயற்பாட்டாளர்களின் பணி என்பதை நாம் மறுந்து விட முடியாது. தமிழத்திலும் இது போன்ற எண்ணற்ற செயற்பாட்டாளர்கள் உள்ளனர். இந்திய தேசம் நன்கு அறிந்த தந்தை பெரியாரும் ஒரு சமூக செயற்பாட்டாளர் தான் அவருடைய அளப்பரிய பணி தான் தமிழகத்தை மற்ற மாநிலங்களிலிருந்து தனித்து காட்டுகின்றது. சமூக செயற்பாட்டாளர்கள் உருவாக்கிய அமைப்புகள் தான் இந்நாளில் அரசியல் கட்சிகளாக மாற்றங்கள் அடைந்தன. அந்த மாற்றங்களை நோக்கி வந்தவர்கள் தான் பேரறிஞர் அண்ணாவும், டாக்டர் கலைஞர் அவர்களும்.

எனவே சமூக செயல்பாட்டாளர்களை ஒடுக்குவது என்பது சாமான்ய மக்களின் குரல் வளையை நெரிப்பதாக பொருள்படும். சமூகத்தின் மீது அக்கறை கொண்டு செயல்படும் இவர் களை யும், இவர்களை போன்றவர்களையும் பாதுகாக்க வேண்டியது நமது முதற்கடமை. இவர்களை பாதுகாக்காமல் போனால் அடுத்த தாக்குதல் தொழிற்சங்கம் மற்றும் பல அமைப்புகளை நடத்துகின்றவர்களையும் தாக்கும் எனவே சமூகசெயற்பாட்டாளர்களை பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம். கரம் கோர்ப்போம்.

**- தி.ஜெயசங்கர்**



## திருநெல்வேலி கிளைக்கு பாராட்டு

தோழர் ஜெ. முருகன், மின்பாதை ஆய்வாளர். கோபால சமுத்திரம் பிரிவு, கல்லிடைக்குறிச்சி கோட்டம், திருநெல்வேலி மின் வட்டக் கிளை அவர்கள் கொரோனா தொற்றால் மரணமடைந்தார். வாரியத்திலிருந்து கிடைக்க வேண்டிய அனைத்து பணப்பயன்களையும் பெற்று அனைத்து உதவிகளையும் செய்த திருநெல்வேலி கிளையை ஜெ. முருகன் குடும்பத்தினர் அனைவரும் பாராட்டி நன்றி தெரிவித்தனர்.

# தொழிலாளர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகள் குறித்து வாரியத் தலைவருடன் நாம் நடத்திய பேச்சு வார்த்தை கடிதம்

நாள்: **09.08.2021**

பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,
வணக்கம்

பொருள் : நிர்வாகம் - தொழிலாளர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண கோருதல் - தொடர்பாக

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் மீது தீர்வுகாண பலமுறை கடிதங்கள் கொடுத்தும் தீர்வுகாணப்படவில்லை. இதனால் பணியாளர்கள் மத்தியில் கடுமையான மனச்சோர்வும், வாரிய நிர்வாகத்தின் மீது அவநம்பிக்கையும் ஏற்படுத்துகிறது என தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

1. மின்வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களை எந்தவித முகாந்திரமும் இல்லாமல் இடமாறுதல் செய்யப்படுகிறார்கள். இதனால் பணியாளர்கள் தங்களது பணியை செய்வதில் சோர்வு ஏற்படுகிறது. எப்பொழுது இடமாறுதல் உத்தரவு வெளியாகும் என அச்சத்தில் பணியாற்ற வேண்டியுள்ளது. வாரிய விதிமுறைகளின்படி பதவி உயர்வு இடமாறுதல் ஆகியவற்றில் உத்தரவு வழங்கப்பட வேண்டும்.
2. மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதிநேர பணியாளர்களில் ஒருசாரருக்கு சத்துணவு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்கி நிரந்தரப்படுத்தப்பட்டு மீதமுள்ள சுமார் 600-க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு வயது சான்று தொடர்பாக வட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து திரும்ப பெறப்பட்ட பின்பும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்டவில்லை என்பது கவலையளிக்கிறது.
3. மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை வாரிய ஆணை B.P. (Chairman) No 9 (Adm Br) dt 09.01.2008 படி அடையாளங்கண்டு முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தினக்கூலியாக ரூ.380/-ஐ வாரியமே நேரிடையாக வழங்கிட வேண்டும்.
4. கேங்மேன் பணியாளர்களுக்கு சம்பளத்தில் இனவாரியாக பிரிக்கப்படும் இனங்கள் குறித்து தெளிவான, ஒரே மாதியான பிடித்தங்கள் மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட வேண்டும்.
5. கடந்த 22.02.2018-ல் தொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்வாரியத்தில் பயிற்சி காலம் என்பது மூன்று மாதங்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் கேங்மேன் பணியாளர்களுக்கு இரண்டாண்டுகள் தொகுப்பூதியம் என வரையறுத்தது, முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிரானது. எனவே பயிற்சி காலம் மூன்று மாதங்கள் என நிர்ணயம் செய்து காலநிலை ஊதியமாக மாற்றப்பட வேண்டும். மேலும் அவர்களுக்கு ஊர்மாறுதல் உத்தரவு வழங்கப்பட வேண்டும்.
6. கல்வித்தகுதியில் தமிழில் தேர்ச்சி பெறாமல் இருந்தமைக்காக இந்த கொடிய கொரானா நோய் தொற்று காலத்தில் தேர்வு நடத்தப்படாத சூழலில் திருமதி ஜெயா

கணக்கீட்டாளர் தேனி வட்டம் திரு.முகேஷ்சந்த் இளநிலை உதவியாளர் உடுமலை வட்டம் ஆகியோரை பணிவிடுப்பு செய்து வாரிய நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. திருமதி ஜெயா தற்போது தமிழ்வழி கல்வியில் தேர்ச்சி பெற்றுள்ளார். அதே போல திரு. முகேஷ்சந்த் அவர்களுக்கு பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளில் கொரானா தொற்று நோய் காரணமாக கடந்த மார்ச் 2020 லிருந்து தேர்வு எழுத இயலவில்லை. இவருக்கு மீண்டும் ஒரு முறை வாய்ப்பு வழங்கி வாரிய பணியில் பணியாற்ற இருவருக்கும் அனுமதி அளித்திட வேண்டும்.

7. புதிதாக உருவாக்கப்பட்ட 63 பிரிவு அலுவலகங்களுக்கும், துணை மின் நிலையங்களுக்கும், Redeployment செய்யப்பட்ட இடங்களுக்கும் பதவிகள் அனுமதித்திட வேண்டும்.
8. துணை மின் நிலையங்களில் இளமின் பொறியாளர் 2-ம் நிலை காலிப்பணியிடங்கள் உள்ள நிலையில் வாரியப்பணியில் 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் களப்பிரிவு பணியில் உள்ள பட்டயம் அல்லாத பணியாளர்களை 3: 1 என்ற விகிதாச்சாரத்தில் நியமிக்கப்பட வேண்டும். (அதாவது 3 தொழில்நுட்ப உதவியாளர்கள் 1 பட்டயம் அல்லாத களப்பிரிவு தொழிலாளி) என்று வாரிய விதிமுறைகள் உள்ளது. ஆனால் தொழில்நுட்ப உதவியாளராக பணியில் சேர்ந்தவர்களுக்கு போதிய ஆண்டு இல்லாத காரணத்தால் தகுதிகாண் அறிக்கை களப்பிரிவு ஊழியர்களுக்கு கேட்கப்படுவதில்லை. களப்பிரிவு ஊழியர்கள் சில ஆண்டுகளில் ஓய்வுபெற உள்ளதால் அவர்களுக்கு ஒரு வாய்ப்பளித்து துணை மின் நிலையங்களில் இரண்டாம் நிலை இளமின் பொறியாளராக பணியாற்றிட வாய்ப்பு வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.
9. பட்டயம் அல்லாத இளநிலை பொறியாளர் 2-ம் நிலையிலிருந்து இளமின் பொறியாளர் முதல் நிலைக்கு பதவி உயர்வு வழங்கும் பொழுது பணி விதிகளில் குறிப்பிட்டுள்ளது போலவும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்பின் அடிப்படையிலும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். எற்கனவே 2015 மற்றும் 2020 ஆண்டுகளில் வழங்கிய வழங்கிய பதவி உயர்வு பட்டியலில் உயர்நீதிமன்ற தீர்ப்பை கவனத்தில் கொள்ளாமல் வழங்கி உள்ளதை நினைவுப்படுத்த விரும்புகிறோம்.
10. களஉதவியாளர், கணக்கீட்டாளர், தொழில்நுட்ப உதவியாளர், உதவி பொறியாளர், இளநிலை உதவியாளர் (கணக்கு) ஆகிய பதவிகளில் பல்லாயிரக்கணக்கான காலிப்பணியிடங்கள் உள்ளதால் கூடுதல் பணிச்சுமையோடு பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். எனவே காலிப்பணியிடங்களை ஏற்கனவே அறிவித்துள்ளவாறு 2900 ITI படித்த களஉதவியாளர், 500 இளநிலை உதவியாளர், 1300 கணக்கீட்டாளர், 600 உதவிப்பொறியாளர், பணியிடங்களையும் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுப்பதோடு, ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 5000 கேங்மேன் பணியாளர்களுக்கு பணி நியமன உத்தரவும் வழங்கப்பட வேண்டும்.
11. நிர்வாகப்பிரிவில் நிரப்படாமல் உள்ள முதுநிலை பணித்தொகுதி அலுவலர் பதவியை நிரப்புவதோடு வட்ட அலுவலங்களில் ஆய்வு செய்ய ஆய்வுக்குழுவையும் அனுமதிக்க வேண்டும்.
12. அனல்,புனல், உற்பத்தி நிலையங்களில் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் அனல், மின் நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட தெர்மல் அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து, தொழில் அமைதியை பாதுகாப்பதோடு, தொழில் உறவையும் மேம்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

# வாரிய ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் போதும், ஊர் மாறுதல் வழங்குவதிலும் அரசியல் தலையீடு கூடாது என்று வாரியத்திற்கு நாம் அளித்த கடிதம்

*நாள்: **14.07.2021***

பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,
வணக்கம்

பொருள் : பணியமைப்பு - பதவி உயர்வு வழங்கிடும் போது பின்பற்ற வேண்டிய வாரிய வழிகாட்டுதல் உத்தரவை அமலாக்கம் செய்வது - தொடர்பாக

பார்வை : 1. குறிப்பாணை எண் 114124/ G11/G111/2001 dt 20.11.2001
2. Memo No 007833/ 42/ G43/G432/2009-1 dt 02.02.2009

பதவி உயர்வு வழங்கிடும் போது பின்பற்ற வேண்டிய **(Reback Policy -Order)** வாரிய வழிகாட்டுதல் உத்தரவை பின்பற்றி வட்டஒதுக்கீடுதல் வழங்குவது தொடர்பாக எங்களது கருத்துக்களையும் உடனடி நடவடிக்கையும் எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அலுவலகத்தில் வழங்கப்படும் இரண்டு மற்றும் மூன்றாம் தொகுதி பணியாளர்களின் பதவி உயர்வுகள் வழங்கிடும் போது பின்பற்ற வேண்டிய வழி முறைகள் பின்பற்றப்படுவதில்லை என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். பார்வையில் கண்ட உத்தரவில் நான்கு முக்கிய விளக்கங்களை தாங்கள் வெளியிட்டீர்கள். அதை தாங்களே மதிக்காமல் விதி மீறி உத்தரவு வழங்கியது பொருத்தமல்ல. சமீபத்தில் JE-II to JE-I பதவி உயர்வு விருப்ப மாறுதல் காலத்தில் வழங்கியதை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம். தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பெரும்பான்மையான உத்தரவுகள் அரசியல் சிபாரிசு மூலம் வழங்கப்படுவது தொடர் கதையாக உள்ளது. இதனால் சீனியராக உள்ளவர்கள் அரசியல் சிபாரிசை விரும்பாதவர்கள், நேர்மையாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் கடுமையாக பாதிக்கின்றனர்.

தேனி வட்டத்தில் பணிபுரியும் அருள் என்பருக்கு ATO பதவி உயர்வின் போது தேனியில் காலியிடம் இல்லாததால் அவருக்கு பல்லடம் வழங்கப்பட்டது. அவரும் பணியில் இணைந்தார். பிறகு **Reback Policy** அடிப்படையில் விண்ணபித்தார். அவரின் மனுவை பரிசீலனை செய்யாமல் அவரை விட இளையவருக்கு தேனி வட்டத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது. இது போன்ற எண்ணற்ற உதாரணங்களை எங்களால் சொல்ல முடியும்.

திரு. காளிப்பன் மின்பாதை ஆய்வாளர் சேலம் அவர்களின் மனைவி படுத்த படுக்கையாக ( Bed ridden) கடந்த 2 ஆண்டுகளாக உள்ளார். அவர் உண்பதும், கழிப்பதும் படுக்கையில் தான். இவர் தான் அனைத்தையும் கவனித்து வருகின்றார். இவரின் ஊர் மேட்டூரில் உள்ளது. சேலத்திலிருந்து மேட்டூர் வட்டத்திற்கு மருத்துவ காரணத்திற்காக மாறுதல் உத்தரவை வழங்க கோரிய மனு தலைமை பொறியாளர் பணியமைப்பு அவர்களால் இன்றுவரை பரிசீலனை செய்ய முடியவில்லை. திரு.காளியப்பன் மின்பாதை ஆய்வாளர் அவர்களுக்கு அரசியல் சிபாரிசு இல்லை என்பதற்காக அவரின் மனு ஒரு

வருடமாக பாராமுகமாக இருப்பது பொறுத்தமல்ல என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். தற்போது அவரது மனைவி காலமாகி விட்டார்.

அதே போல விஜி - அசசர் மருத்துவ காரணங்களால் கேடர் கன்வர்சன் கேட்டு விண்ணப்பித்த அவரின் மனு ஒரு வருடத்திற்கு மேலாக Shottle போல கீழேயும், மேலேயும் வலம் வந்து கொண்டுள்ளது. ஒரு கோப்பின் மீது தாங்கள் காட்டும் அலட்சியம் ஒரு குடும்பத்தை சிதைக்கும் என்பதை தாங்கள் அறிவீர்கள் என்று எனக்கு தெரியாது. அனால் நிர்வாகப்பிரிவில் இது போன்று பல விஷயங்கள் தொடர்வது ஏற்புடையதல்ல.

வாரிய ஊழியர்களின் கோப்புகள் மீது, நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்காமல் போவதால் அதற்கான பயன்களை அவர்களுக்கு கிடைக்காமல் போவது தொடர்கதையாக உள்ளது. வாரிய உத்தரவின் அடிப்படையில் தகுதியிருந்தும் சிபாரிசு இல்லை என்பதால் கிடைக்கவில்லை என்ற மனநிலைக்கு ஊழியர்கள், பொறியாளர்கள், அதிகாரிகள் வருவது என்பது மின்வாரியத்தின் மேன்மைக்கு உகந்தது அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்



**வேலை நிறுத்த விளக்கக் கூட்டம் கோவை**

**நாகையில் வேலை நிறுத்த விளக்கக் கூட்டம்**



# புதியதாக வாரியத்தில் இணைந்த கேங்மேன் பணியாளர்களுக்கு பயிற்சி காலத்தை மூன்று மாதங்களாக குறைக்க கோரி வாரியத்திற்கு நாம் எழுதிய கடிதம்

நாள்: **12.07.2021**

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : நிர்வாகம் - புதியதாக இணைந்த கேங்மேன் பணியாளர்களுக்கான பயிற்சி காலத்தை போடப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தப்படி மூன்று மாதங்களாக குறைப்பது - தொடர்பாக...

பார்வை :

1. முத்தரப்பு ஒப்பந்த நாள் - 22.02.2021
2. வாரிய உத்தரவு எண் 05 நாள் 16.03.2018
3. தலைமைப் பொறியாளர் பணியமைப்பு கடித நாள் 035863 /342/G46/ G462/ 2018 dt 25.05.2018
4. எங்களது கடித நாள் - 14/06/2021

மின்வாரியத்தில் புதியதாக இணைந்த கேங்மேன் பணியாளர்களின் பயிற்சி காலத்தை இரண்டு ஆண்டுகள் என்று தன்னிச்சையாக வழங்கிய உத்தரவை வாரியம் தொழிற்சங்கங்களோடு ஏற்படுத்திய முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மூன்று மாதங்களாக குறைத்து உத்தரவு வழங்குவது தொடர்பாக எங்களது கருத்துக்களையும் உடனடி நடவடிக்கையும் எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

மின்வாரியத்தில் புதியதாக கேங்மேன் பயிற்சி என்ற பதவியில் 9613 பேர் பணியமர்த்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் எங்களது சங்கத்தின் தொடர்ச்சியான நடவடிக்கையாலும் 22.02.2021 மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் எங்களது வேண்டுகோளை அடுத்து இடைக்கால தீர்ப்பின் அடிப்படையில் அனைவருமே கேங்மேன் பயிற்சியாளராக பணியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.15,000/- வழங்கப்பட்டு வெவ்வேறு மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டு பணி செய்து வருகின்றனர். பார்வை 4-ல் கண்ட எங்களின் கடிதத்தின்படி கேங்மேன் பணியாளர்களை குறைந்த தொகுப்பூதியத்தில் வெளி மாவட்டங்களில் தங்கி வேலை செய்வது மிகவும் சாத்தியமற்றது. கையில் வாங்கும் ரூ.15,000/- சம்பளத்தில் இரண்டு குடும்ப செலவுகளை சமாளிப்பது இயலாத காரரியம் எனவே அவர்களின் பயிற்சி காலத்தை மூன்று மாத காலமாக குறைத்து காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும் என்று கடிதம் அளித்திருந்தோம்.

பார்வையில் கண்ட எங்களது கடித வாயிலாக கேங்மேன் பணியாளர்களுக்கு 2 ஆண்டுகள் பயிற்சி என்று வாரியம் தன்னிச்சையாக அறிவித்து உத்தரவு வழங்கியது தவறு என்பதையும் சுட்டிக்காட்டி எழுதியிருந்தோம். வாரிய ஆணை எண் 5 நாள் 16.03.2018-ல் பாரா 4-ல் தெளிவாக

குறிப்பிடப்பட்டுள்ளது யாதெனில் வாரியத்தில் புதிய பணி நியமனங்களாக ஏற்கனவே வந்தவர்கள், புதிய பணி நியமனத்தின் மூலம் வருபவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக மூன்று மாத பயிற்சிகாலம் என்று வரையறை செய்து உத்தரவை வழங்கியது. வழங்கப்பட்ட இந்த உத்தரவில் உள்ள சந்தேகங்களுக்கான தெளிவுரை பார்வை 3-ன்படி வழங்கப்பட்டுள்ளது. அனைத்திலும் பயிற்சி காலம் மூன்று மாதம் என்ற தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் கேங்மேன் பணியாளர்களின் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், வாரியம் தொழிற்சங்கங்களோடு போட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தை கருத்தில் கொண்டும் [redacted] [redacted] [redacted] வராமல் பாதுகாத்து இரண்டு ஆண்டுகள் பயிற்சி காலத்தை மூன்று மாதமாக குறைத்து உத்தரவு வழங்கி தொழில் உறவை மேம்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்




**வேலை நிறுத்த விளக்கக் கூட்டம் காஞ்சிபுரம்**

**வேலை நிறுத்த விளக்கக் கூட்டம் செங்கல்பட்டு**



# கணக்கீட்டுக்குழு கூட்டம்

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில கணக்கீட்டுக்குழு கூட்டம் 25.07.2021 அன்று இணைய வழியாக நடைபெற்றது. மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில தலைவர் ,பொதுச்செயலாளர் மற்றும் 15 திட்டங்களில் இருந்து 20 தோழர்கள் கலந்து கொண்டனர்.

கொரானா காலக்கட்டத்தில் கணக்கீட்டாளர்களுக்கு ஏற்பட்ட சிரமங்கள், பிரச்சனைகள், உயிரழிப்புகள் விவாதிக்கப்பட்டது. மின்சார மசோதாவால் எற்படும் பாதிப்புகள், ஆகஸ்ட் 10 வேலை நிறுத்தம், கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள் பதவி உயர்வு பெற்றும் பதவிக்கான பணி செய்ய முடியாமல் சந்திக்கும் வேதனைகள், ஒன்றிய அரசின் தொழிலாளர் நல சட்ட திருத்தங்களால் ஏற்படும் சவால்கள், ஸ்தாபன விரிவாக்கம் போன்ற விசயங்கள் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. நீண்ட விவாதத்திற்கு பிறகு கீழ்கண்ட ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

1. மாநில அளவில் கணக்கீட்டுக்குழு உள்ளதைப்போல திட்ட மட்டத்திலும் அமைக்க வேண்டும்.
2. மண்டல அளவில் கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் சிறப்பு கூட்டங்கள் நடத்தி குறைகள் கேட்கப்பட்டு தீர்வு காண வேண்டும். குழு அமைக்க வேண்டும்.
3. காலி இடங்கள் நிரப்பப்பட வேண்டும். அதன் மூலம் பதவி உயர்வு பெற்றவர்கள் பதவிக்கான பணியை செய்ய வழிவகை செய்ய வேண்டும்.
4. கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள் கணக்கீடு செய்யும் பொழுது ஏற்படும் தவறுகளை திருத்தி முறைப்படுத்திட AE 5000, AAO 10,000 என்று இருப்பதை தொகையை அதிகரிக்க வேண்டும்.
5. மீட்டர் பழுது வீதப்பட்டி, ( Defective) தவறாக பயன் படுத்துதல் ( Misuse), மின் திருட்டு போன்ற குறைகள் கணக்கீடு செய்யும் பொழுது கண்டறியப்பட்டால் அதை கணினியில் பதிவிடும் வகையில் தொழில்நுட்பத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டும்.
6. HHD-ல் ஏற்படும் பழுதுகள் சரிசெய்ய உள்ள மையங்கள்விரிவு படுத்தப்பட வேண்டும். குறைந்தபட்சம் மண்டலத்திற்கு ஒரு பழுது நீக்கும் மையம் கொண்டுவர முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதற்கான தொகையையும் வாரியமே செலுத்த வேண்டும்.
7. வாரிய ஆணைகள்,உத்திரவுகள் சரியான நேரத்தில் தெளிவாக வருவதை உத்தரவாதப் படுத்தப்படவேண்டும்.
8. பஞ்சாயத்து காசோலை பிரச்சனையில் பதவி உயர்வு, உள்முகத்தேர்வு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதை வாரிய அதிகாரிகளிடம் உரிய முறையில் பேசி தீர்வு காண வேண்டும்.
9. அனைத்து பண வசூல் மையங்களிலும் பாதுகாப்பு பெட்டக வசதி செய்துதர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
10. ஒவ்வொரு ஆண்டும் உயருகின்ற மின் இணைப்புகளுக்கு ஏற்ப புதிய பதவிகளை ( Post sanction) வழங்க வேண்டும்.
11. ஆகஸ்ட் 10 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க கணக்கீட்டு பிரிவு ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ள உறுதி செய்ய வேண்டும்.
12. கணக்கீட்டு அலுவலர்களுக்கு (ATO) கீழ்நிலை பணியாளர்கள் அனுமதிக்க முயற்சி எடுக்க வேண்டும்.
13. ஸ்தாபன விரிவாக்கத்திற்கு திட்டமிட வேண்டும்.
14. கணினி, பிரிண்டர், HHD பழுதடைந்தால் உடனடியாக மாற்றித்தர வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.
15. பதவி உயர்வுகள் காலதாமதமின்றி கிடைப்பதற்கு தொடர் கவனம் செலுத்த வேண்டும்.

எம். தனலட்சுமி

மாநில அமைப்பாளர் கணக்கீட்டுக்குழு




# தமிழக அரசின் வெள்ளை அறிக்கையும்! மின்துறையும்!

தமிழக நிதி அமைச்சர் கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் வரி வருவாயில் ஏற்பட்டுள்ள, நிதிநிலை தொடர்பாக வெள்ளை அறிக்கையை ஆகஸ்ட் 9-ல் வெளியிட்டுள்ளார்.

மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், சொந்த வரி வருவாய் விகிதத்தில் அனைத்து மாநிலங்களின் சராசரி வீழ்ச்சியை விட தமிழ்நாட்டில் பெருமளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களுக்கான கடன்சுமை உட்பட ஒட்டு மொத்தமாக கடன்கள் 2022 மார்சு மாதத்தில் ரூ.1,70,189 கோடியாக இருக்கும் அரசு ஊழியர்களுக்கான ஊதியம் ஓய்வூதியம் போன்ற செலவுகளைக்கூட கடன்கள் பெற்று பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் அரசு உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் மின்துறை, போக்குவரத்துத்துறை ஆகியவற்றின் கடன் எச்சரிக்கை மிகுந்த சூழலில் உள்ளது. மின்சார வாரியம் மற்றும் போக்குவரத்து கழகங்கள் மட்டும் ரூ. 2லட்சம் கோடிக்கு அதிகமான கடன்கள் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மின்சாரத்திற்கு மட்டும் அரசுக்கு ரூ.1,34,000/- கடன் என்றும், ஆனால் அதே நேரத்தில் மின்சாரம் மற்றும் குடிநீர் கட்டணங் களுக்காக உள்ளாட்சி அமைப்புகள் ரூ.1743/- கோடி பாக்கி வைத்துள்ளது.

மேலும் தமிழ்நாட்டின் போக்குவரத்து கழகங்களின் தினசரி இழப்பு ரூ.15/- கோடி என்றும் அரசு பேருந்துகள் ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.59.15/- இழப்பை எற்படுத்துகிறது. அதாவது இயக்கச் செலவு ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.96.75/- என கணக்கிடப்பட்டு கட்டண வசூல் கிலோ மீட்டர் ஒன்றுக்கு ரூ. 37.60/- ஆக இருப்பதால் போக்குவரத்து கழகத்திற்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அதே போல மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின்சாரம் வழங்குவதற்கு சராசரி செலவினம் ரூ. 9.06/- என்ற நிலையில், சராசரி வசூல் யூனிட் ஒன்றுக்கு 6.70 ரூபாயாகும். எனவே 2.36/- ரூபாய் இழப்பு ஏற்படுகிறது.

பொதுவான இந்த இருதுறைகளின் மீதும் இழப்புக்கான காரணங்களை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

- ***அதிக விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்ததினாலும், சொந்த மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தியை அதிகரிக்காததாலும்.***
- ***மின் கட்டணத்தை கடந்த ஏழு ஆண்டுகளாக உயர்த்தாமல் இருந்த காரணத்தாலும்,***
- ***குறைந்த விலை மற்றும் 100 யூனிட் இலவசம் மூலம் வீடுகளுக்கான வழங்கப்பட்ட மின்சாரத்திற்கு ஏற்பட்ட இழப்பு 18735 கோடி ரூபாய்***
- ***பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப் படுவதே முக்கிய காரணம்.***
- ***அதே போல போக்குவரத்திலும்***

***கட்டண உயர்வு இல்லாமல் இருந்த காரணத்தினாலும்,***

★ ***உதிரிபாகங்களை அதிக விலைக்கு கொள்முதல் செய்தாலும்,***

என குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்க அதில் பணியாற்றும் பணியாளர்கள் அல்ல என்பதை தமிழக நிதி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

தனியாரிடமிருந்து அதிக விலைக்கு வாங்கிய மின்சாரத்திற்கான கட்டணமும் மின்வாரியம் உற்பத்தி செய்த கட்டணத்தையும் சேர்த்து சராசரி செலவினம் ரூ. 9.06/- என்று குறிப்பிடப்பட்டிருப்பது சரியல்ல. அதிக விலைக்கு நீண்ட கால கொள்முதல் மூலம் வாங்கியது தான் இதற்கு காரணம்.

கடந்த 10 ஆண்டுகளாக ஏன் தற்போதும் கூட மின்சாரத்திற்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து முழுவீச்சில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய தடையாக இருப்பது எது? என்பது அனைவருக்கும் தெரியும்.

மின்வாரியம் பங்கு தாரராக உள்ள மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கூட மின்சாரத்தை கொள்முதல் செய்ய மின்வாரியம் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் தான் இந்த கடன்சுமை ஏற்பட்டது.

மின்சாரத்தை கொள்முதல் செய்வதில் நீண்ட கால ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்தாலே இழப்பீட்டை தடுக்க முடியும். மேலும் மின் உற்பத்தி திட்டங்கள் ஆமை வேகத்தில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை போர்க்கால அடிப்படையில் விரைந்து முடித்தாலே கடனிலிருந்து தப்ப முடியும். திட்ட மதிப்பீடு காலங்களை தாண்டி பல ஆண்டுகளாக நீடித்து பணிகள் நடைபெற்று வருவது தான் கடன்சுமை அதிகரிக்க காரணம்.

தரமற்ற தளவாட பொருள்கள் உதய்திட்டம் உள்ள திட்டங்களில் இணைந்து கடன் சுமையை அதிகரித்ததும் ஒரு காரணம்.

ஊழல் (Corruption) தரகு (Commission) வசூல் (Collection) ஆகிய இந்த மூன்று வழிகளில் தான் அரசினுடைய பொதுத்துறைகள் நிதி நெருக்கடியில் சிக்கி கடன் சுமையில் வீழ்கிறது.

பணியாற்றும் ஊழியர்களுக்கும் மற்றும் ஓய்வூதியர்களுக்கும் வழங்கும் நிதியில் எந்த

தனியாரிடமிருந்து அதிக விலைக்கு வாங்கிய மின்சாரத்திற் கான கட்டணமும் மின்வாரியம் உற்பத்தி செய்த கட்டணத்தையும் சேர்த்து சராசரி செலவினம் ரூ. 9.06/- என்று குறிப்பிடப் பட்டிருப்பது சரியல்ல.

இழப்பும் இல்லை. மொத்த வருவாயில் 16 சதம் கூட இதற்கு செலவு ஆவதில்லை. ஆனால் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் தான் மிகப்பெரிய சுமையாக சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்காது. இந்த இரு துறைகளில், மின்வாரியத்தில் 42000-க்கும் மேற்பட்ட காலி பணியிடங்களும், போக்குவரத்தில் சுமார் 20,000-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களும் உள்ளது. காலிப்பணி இடங்களில் உள்ள வேலைகளை இருக்கின்ற பணியாளர்கள் கூடுதல் பனிச்சுமையோடு பணிகளை செய்து அரசுக்கு லாபத்தை தான் ஈட்டித் தந்துள்ளனர்.

மின் கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பது தான் இதற்கு காரணம் என குறிப்பிட்டிருப்பதும். டீசல் விலை உயர்வுக்கேற்ப போக்குவரத்து கட்டணத்தை உயர்த்தாமல் இருந்தது தான் காரணம் என்பதும் சரியல்ல.

ஏனெனில் இலவசங்களை மக்கள் கேட்கவில்லை. ஆட்சி அதிகாரத்தில் வருவதற்கு முந்தைய அதிமுக அரசு வீடுகளுக்கு 100 யூனிட் மின்சாரத்தை வழங்கியது. தற்போதைய தமிழக அரசும் பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணத்தை வழங்கியுள்ளது. இவை இரண்டும் நல்ல அம்சங்கள்.

ஆனால் மாநில அரசு அறிவித்த இந்த திட்டங்களுக்கான நிதியை சம்மந்தப்பட்ட துறைகளுக்கு மாதந்தோறும் வழங்கினாலே கடன் சுமை குறையும்.

பத்தாண்டுகள் அதிமுக 'ஆட்சியின் நிதிநிலை தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிட்டது, நல்ல நடவடிக்கை வரவேற்கத் தக்கது. ஆனால் இதை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கின்ற பொழுது பணியாளர்கள் மீதோ, மக்கள் மீதோ சுமையை சுமத்துவது மக்கள் நல அரசு என கூறிவரும் அரசக்கு எதிராக அமையும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

- Yesare

# ஊழியர்களிடம் தொழிற்சங்கங்கள் நன்கொடை பிடித்தம் செய்ய மீண்டும் வழங்கிய வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**SECRETARIAT BRANCH**
**144, ANNA SALAI,**
**CHENNAI-600 002.**

**Memo. (Per.) No.43915/A3/A31/2020-4, Dated:10.08.2021.**

Sub: TANGEDCO – Union – Deduction of Annual Subscription/ Donation from the salary of the willing employees – Revised Orders – Issued.

Ref:
1. (Per) B.P. (Ch) No.77 (SB) Dated:28.03.2007.
2. (Per.) B.P. (Ch) No.111 (SB) dated 09.05.2007.
3. Secretariat Branch Memo. (Per.)No.39962/A3/A31/ 2020-1, dated:18.11.2020.
4. Secretariat Branch Memo. (Per.)No.43915/A3/A31/ 2020-1, dated:04.02.2021.

*****

In the Board's Proceedings first cited, orders were issued for deduction of Annual Union Subscription and Donation from the salary of the willing employees of the Unions/Association, who make the specific request before the Board in this regard. In the standard terms and conditions annexed to the Board's proceedings second cited, it has been ordered that subscription shall be deducted from the pay bill for May payable in June and donation shall be deducted from the pay bill for November payable in December every year.

2. In the reference third cited, orders were issued for cancellation/ dispensation off the scheme of deduction of Annual Union Subscription/ Donation from the salary of the willing employees of the TANGEDCO and also ordered to cancel the Board's Proceedings first and second cited with immediate effect.

3. In the reference fourth cited, orders were issued for deduction of Annual Subscription from the salary of the willing members of their unions and the members shall be permitted for deduction of only one membership fee.

4. The unions have demanded to reconsider the orders issued in reference third cited and to give permission for continuing the deduction of Annual Subscription/Donation from the salary of the willing members of their union as per the Board's Proceedings first and second cited.

5. The request has been examined in detail. After careful examination, it is hereby ordered that the deduction of Annual Subscription/ Donation be permitted from the willing employees of their union every year. It is also hereby ordered that the willing employees who made a specific request for deduction of Annual Subscription/ Donation to the Pay drawing Officer before 15th May of a year for a union shall be in force for three years. After that the employees should renew their request to the pay drawing officer to deduct the Annual Subscription/Donation to their unions. The other conditions stipulated in the Board's Proceedings second cited remain unaltered.

6. The receipt of the Memo. shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**A.MANIKKANNAN**
**SECRETARY**

# மின்வாரியத்தில் ஊர்மாறுதலில் வாரிய விதிமுறைகள் மீறல்! தமிழக அரசே! தலையீடு செய்!

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள், அலுவலர்கள், பொறியாளர்களுக்கு விருப்பமாறுதல் விண்ணப்பம் அளிக்க ஆன்லைனில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1 முதல் 20 வரையிலும், ஜூலை மாதம் 1 முதல் 15-ந்தேதி வரையிலும் விண்ணபிக்க வேண்டுமென மின்வாரியம் உத்தரவு வெளியிட்டுள்ளது. இதன் அடிப்படையில் தான் விருப்ப மாறுதலில் வேறு இடங்களுக்கு செல்ல விரும்புகின்றவர்கள் விண்ணப்பித்து வந்தனர்.

ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடன், இந்த விருப்ப மாறுதல் விண்ணப்பங்களின் மீது நேர்மையான நடவடிக்கை எடுத்து பணியிட மாறுதல்கள் உத்தரவு வழங்குவார்கள் என எதிர்பார்த்து ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலகர்கள், காத்திருந்த நிலையில், இந்த ஒரு மாத காலங்களாக பல்வேறு உத்தரவுகளை மின்வாரிய நிர்வாகம் வழங்கி வருகிறது.

மின்வாரிய பணியில் தவறு செய்பவர்களை, தவறு என்று நிருபிக்கப்பட்ட பின்பு மாறுதல் செய்வதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது.

மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றுபவர்களை இடமாறுதல் செய்ய நினைத்தால், அவர்களது விருப்ப மாறுதல் விண்ணப்பத்தையும் பரிசீலித்து உத்திரவு வழங்காமல் ஏதோ ஒரு நிர்பந்தத்தின் அடிப்படையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

மின்துறை அமைச்சரை கடந்த ஆகஸ்ட் 4-ந்தேதி தொழிற்சங்கங்கள் சார்பாக சந்தித்து பேசிய பொழுது, மின்துறை அமைச்சர் தன்னிடத்தில் பணியிட மாறுதல் கோரிக்கை வந்தால் கேட்கப்படும் இடம் காலி இடமாக இருந்தால் மட்டுமே பரிசீலிக்கப்படும் என தெரிவித்தார்.

ஆனால் மின்துறை அமைச்சர் தொழிற்சங்கங்களிடம் தெரிவித்ததை மீறி, இந்த தாறுமாறான உத்தரவுகளை பிறப்பிக்க எங்கிருந்து உத்தரவு வந்ததென்று தெரியவில்லை.

எப்பொழுது இடமாற்றம் செய்வார்களோ என்ற அச்சத்தில் பணியாளர்கள் பணியாற்றும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதால் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்த இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இது தொடருமேயானால் ஊழியர்கள், பொறியாளர்கள். அலுவலர்கள் பாதிப்படைவார்கள், இது தொழில் அமைதியையும் உறவையும் பாதிக்கும்.

- எஸ்.இராஜேந்திரன்



வேலை நிறுத்த விளக்க கூட்டம் திருச்சி மாநகர்



# என்று முன்னேறுவோம்!
# ஒலிம்பிக் போட்டியில்!!

32வது ஒலிம்பிக் போட்டி ஜப்பான் நாட்டில் ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 8 வரை நடைபெற்றது. ஆட்சியாளர்களின் விளையாட்டு துறையின் மீது அக்கறை இன்மை காரணமாக 130 கோடி ஜனத்தொகையில் 124 போட்டியாளர்கள் இந்தியாவில் இருந்து பங்கேற்றுள்ளதை பார்க்கும்போது தெரிகிறது.



இந்த போட்டியில் ஒரு தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என 48வது இடத்தை பிடித்துள்ளது. இதற்கே நாம் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும். 100 ஆண்டுகளாக பங்கேற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் முதன் முறையாக 7 பதக்கங்களை வென்று ஒலிம்பிக் வரலாற்றில் இது வரை இல்லாத உயரத்தை எட்டி இருக்கிறது! என்று நாம் பெருமை பட்டாலும் இந்த துறைக்கு ஆர்வம் உள்ளவர்களை கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தி உதவிகள் செய்து முறையான பயிற்சி வழங்க வேண்டியது அரசின் கடமையே!



இந்த ஒலிம்பிக் திருவிழாவில் ஈட்டி எரிதலில் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கமும், பளுதூக்குதலில் சாய்க்கோலம் மீராபாய் சானு, வெள்ளிப்பதக்கமும், மல்யுத்தத்தில் ரவிக்குமார் தாஹியா, பேட்மிட்டனில் பி.டிவி. சிந்து, குத்துச்சண்டையில் லல்லினா போர்கோ ஹெய்ன, மல்யுத்தத்தில் பஜ்ரங்க புனியா மற்றும் ஆடவர் ஹாக்கியில் என வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளோம்.

பதக்கம் பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள். இந்தியாவின் பெருமையை ஒலிம்பிக் போட்டியில் உயர்த்திப்பிடித்த வீரர்கள் வீராங்கனைகளுக்கு மின் ஊழியர்களின் வாழ்த்துக்கள்









## மத்திய அரசு அமல்படுத்த இருக்கும் மின்சார சட்டம் 2021 –ஐ திரும்ப பெற வலியுறுத்தி தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்க கூட்டுக்குழு சார்பாக மாநிலம் முழுவதும் கண்டன ஆர்பாட்டம்

**19.07.2021**















Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 17.08.2021




Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian